
# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 33 ] -உ- [ இதழ் 1

பிரமாதீச - கார்த்திகை - 10—12—73



தருமையாதீனக்குருமுதல்வர்



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

# ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

நீதியிலா மன்னர்
இராச்சியமும் நெற்றியிலே
பூதியிலார் செய்தவமும்
பூரணமாம் — சோதி
கழலறியா ஆசானும்
கற்பிலரும் சுத்த
விழலெனவே நீத்து
விடு.

— சிவபோகசாரம் 130.

**ஆசிரியர் :**

வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான்
சுவாமிகள்

**துணையாசிரியர் :**

மகாவித்துவான்
சி. அருணைவடிவேல் முதலியார்

உ

குருபாதம்

# "ஞானசம்பந்தம்"

## தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 33 | 10-12-73 | இதழ் 1

## உட்பொருள்

| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1 | அறநிறுவனங்களின் வருவாய் நிலை ... | 1 |
| 2 | "ஞானசம்பந்தம்" ... | 4 |
| 3 | தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கியருளிய ஆசியுரை | 6 |
| 4 | புத்தாண்டு வாழ்த்து ... | 10 |
| 5 | அருட்சுடர்க் காட்சி ... | 11 |
| 6 | கௌமாரம் ... | 16 |
| 7 | உமாபதி சிவமும் சித்தாந்த நுட்பமும் ... | 17 |
| 8 | சிவஞான சித்தியார் தெளிபொருள் விளக்கம் | 21 |
| 9 | நட்டசெடி பட்டது ஏன் | 28 |
| 10 | சிவாகம ஸார ஸர்வஸ்வம் ... | 29 |
| 11 | குறியிடு ... | 33 |
| 12 | குருஞானசம்பந்தர் போற்றிய தத்துவப் பிரகாசம் ... | 36 |
| 13 | ஜனன மரண இயல் – பிறப்பும் இறப்பும் ... | 40 |
| 14 | பிறப்புநீங்க வழி ... | 44 |
| 15 | மணிவாசகரும் தில்லையும் | 45 |
| 16 | சிலப்பதிகாரக் கருத்தரங்கு ... | 49 |
| 17 | பெண்களுக்கு அறிவுரை | 53 |
| 18 | உலகநாடுகளில் மக்கள் தொகை ... | 54 |
| 19 | மதிப்புரை ... | 55 |
| 20 | செய்திகள் ... | 57 |
| 21 | எதிர்காலம் ... | 58 |
| 22 | சரபருக்கு லட்சார்ச்சனை | 61 |
| 23 | சந்தாதாரர்களுக்கு அறிவிப்பு ... | 63 |
| 24 | ஆயுள்சந்தா அறிவிப்பு | 64 |
| 25 | பார்வையாளர் குறிப்பு நகல் | 35, 39, 60 |

திருக்கயிலாயபரம்பரைத் தருமையாதீனம்



தம்திருப்பேர் தாங்கிவரத் தண்கருணை பாலித்த
நம்முடைய முதற்குரவர் குருஞானசம்பந்தர்.

உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 33 | பிரமாதீச – கார்த்திகை – 10—12—73 | இதழ் 1

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே — சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## அறநிறுவனங்களின் வருவாய் நிலை

### அறநிலையங்களின் பங்கு :

நமது கோவில்களும், மடங்களும், பிற அறநிறுவனங்களும் நமது தமிழர் சமுதாயத்தில் ஒரு பெரும் பங்கு வகித்துவருகின்றன மக்கள் சிந்தனையாலும், செயலாலும் சிறப்புப்பெறவும், தனிப்பட்டோர் முதல் நமது நாட்டுப் பல்வேறு பட்ட சமுதாயங்கள் ஈறாக அனைத்துமக்களின் மன அமைதி, நாட்டமைதிகளுக்கு இவை காலத்தால் பலவகைகளிலும் உதவி வந்திருக்கின்றன. இப்போதும் உதவிவருகின்றன. இவைகளில் இயற்றப்படும் வழிபாடுகளும் தொண்டுகளும் முட்டுப்பாடின்றி நடைபெறுதற்கு நம் தமிழ் மாமன்னர்களும் பிறரும் நில நிவந்தங்களையும், பிறவற்றையும் இந்த அற நிறுவனங்களுக்கு வழங்கிக் காத்து வந்தாரகள். ஆட்சியிலே பலப்பல மன்னர்பரம்பரைகள்மேன்மையுற்று விளங்கிப் பின் ஒருகாலத்தில் மங்கி அழிவுற்றிருக்கின்றன என்பது சரித்திரம். ஆனால் இந்த அறநிறுவனங்கள் பன்னூறு ஆண்டுகளாக நின்று அதனதன் பணிகளைக் காலத்துக்கேற்பச் செய்துவருகின்றன.

**மன்னர்கள் மாட்சி :**

நமது தமிழ் மன்னர்கள் இக்கருத்தைத் தம் வாழ்நாளில் கடைப்பிடித்தார்கள் என்பதற்குப் பல கல்வெட்டுச் சான்றுகளும் பிறவும் காணக்கிடைக்கின்றன. மன்னர்கள் அரண்மனையைக் காட்டிலும் அரன்மனையாகிய ஆலயங்களைக் கட்டுவித்து, அதனைப் போற்றிப் புரந்து வருவதிலேயே பெரிதும் கவனம் செலுத்தி வந்தனர். அதற்கேற்ப இன்றும் அவர்கள் கட்டிய ஆலயங்களாலேயே அவர்களின் அரசாட்சி வரலாற்றை அறிய முடிகிறது. ஆனால் அவர்கள் ஆட்சிக்கு அடையாளமான அவர்களின் அரண்மனையை இன்று காண இயலவில்லை. இவற்றிற்குத் தமிழக வரலாறுகளும் கல்வெட்டுக்களுமே இன்றும் சான்று பகர்கின்றன. மேலும் அம்மன்னர்களும், மக்களும் முன்னவனர் கோவில் பணிகள் செம்மையாக நடைபெறவேண்டும். அதில் முட்டுப்பாடு எதுவும் நிகழக்கூடாது என்றே கருத்தில் கொண்டு செயல்புரிந்து வந்திருக்கிறார்கள் என்பதையும் நமது பழம்பெரு நூல்களும் பிறவும் எடுத்தியம்புகின்றன.

**நிலையான வருவாய்க்கு நிலம் :**

இவ்விதம் இந்த அறநிறுவனங்கள் செயல்படத் தக்க வருவாய் வரக்கூடியதாக நிலஉடைமைகளை வழங்கியிருக்கிறார்கள். அக்காலத்தில் உடைமைகளில் நிலையானவை நில உடைமைகள் என்று நம்பி வந்தார்கள். இக்கருத்துப்பற்றியே மன்னர்களும் பிறரும், அறநிலையங்களுக்கு நிலையான பொருளாக நிலங்களையே காணிக்கையாக விட்டுவந்தனர். அந்த அறநிறுவனங்களுக்கு, இன்றுவரை அவ்வக் காலத்தில் நிலவி வரும் பொருளாதார நிலைக்கு ஏற்ப, நிலவருவாய், சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்து அரணாக இருந்துவருகிறது.

**சமதர்மச் சட்டம் :**

நமது நாடு சுதந்திரம் பெற்று சமதர்மக் கொள்கையை ஏற்று அதனைச் செயல்படுத்துவதன் காரணமாகப் பலப்பல நிலச்சீர்திருத்தச் சட்டங்கள் இயற்றப்பட்டு அவைகளை மக்கள் சமுதாயம்ஏற்றுக்கொண்டிருக்கிறது. அவற்றைச் செயல்படுத்துவதன்காரணமாகப் பொதுவாக நிலவுடைமைகள் அளவில்சிறியனவாய்ப் பகுக்கப்பட்டிருக்கின்றன. பயிர்த் தொழிலில் ஈடுபட்டு வரும் குடிமக்களின் நலன்கள் காக்கப்படுவதற்குப் பலசட்டங்கள் இயற்றப்பட்டிருக்கின்றன. இவற்றின் விளைவாக இப்போது குடிமக்கள், நிலத்தில் விளையும் விளைவுகளில் பெரும்பகுதியை வாரமாகப் பெற்றுக்கொள்ள வாய்ப்புக்கள் அளிக்கப்பட்டிருக்

கின்றன. மேலும் பயிரிடும் குடிமக்களுக்கு அவர்கள் பயிரிடும் நிலங்களில் உடைமை உரிமையும் வழங்குவதற்கு அண்மையில் சட்டம் ஒன்று இயற்றப்பட்டிருக்கிறது.

## சட்டமும் சங்கடமும் :

மேலேகண்ட சட்டங்களில்உள்ள வாய்ப்புக்களைப் பெறுவதற்கு அச் சட்டத்தில் நிபந்தனைகள் பல உண்டு. ஆனாலும் அவற்றையெல்லாம் அம் மக்கள் நன்குணராத நிலையில், இப்போது நிலவுரிமையாளர்க்குத் தாம்கொடுக்கவேண்டிய வருவாய்களைக் கொடுப்பதில் காலத்தைக் கடத்தியும், மறைத்தும் தவறு செய்துவருகின்றனர். அதன் விளைவாக நில வருமானத்தை நம்பியுள்ளவர்கள் துன்பத்துக்குள்ளாகி வருகிறார்கள். இது தனிப்பட்டோர், அற நிறுவனங்கள் என்ற பாகுபாடின்றி பொதுவாக விளைந்த ஒன்றாகிவிட்டது.

## சமதர்மம் பிறந்த இடம் :

பழந்தமிழர் நம் அறநிறுவனங்களையே, 'இப்போது சொல்லப்படும் சமதர்மக் கொள்கையின் கீழ் தனிப்பட்டவர், சமுதாயம் இவற்றிற்குப் பொதுவாகத் துன்பம் போக்கும் நிலையங்களாக - எல்லோருக்கும் பொதுப்பயன் தரும் நிலையங்களாக உருவாக்கினர்' என்பதை உற்று நோக்குவார்க்கு உண்மை புலனாகும். அதனை, பக்தியுணர்வின் அடிப்படையில் அமைத்து அவர்கள் வாழ்விலும் தாழ்விலும் அமைதி அளிக்கத்தக்கதாக ஆக்கி யிருக்கிறார்கள். இந்த நிறுவனங்கள் இந்த நிலையில் ஆற்றவேண்டிய பொது - சமுதாயப் பணிகள் பலவுண்டு. அவற்றை இப்போது ஆற்றுவதில் குறைபாடுகள் ஏற்பட்டுவிட்டன. காரணம் பெரும்பாலான அறநிறுவனங்கள் நில வருவாயைக்கொண்டு நடத்தவேண்டியதாக அமைக்கப்பட்டிருப்பதுதான். ஆகவே மேலே சொன்ன நிலையில் மக்கள் மனம் திரிந்திருக்கும் இக்காலத்தில் இந்த அற நிறுவனங்கள் அவற்றிற்குக் கிடைக்கவேண்டிய வருவாய்களைப் பெறுவதில் பல தொல்லைகள் ஏற்பட்டுவிட்டன. மேலே சொன்னபடி நிலச்சீர்த்திருத்தச் சட்டங்களில் இவற்றைப் பெற்றுக்கொள்வதில் துன்பம் ஏற்பட்டால் உரிய அதிகாரிகளை நாடி வழக்குக்கொடுத்துத் தீர்வுகாண விதிமுறைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

## அறநிலையத்துறை பொறுப்பேற்கவேண்டும் :

இவற்றைச் செயல்படுத்தி நடத்தி வைக்கவேண்டிய அதிகாரிகள், இந்த அறநிறுவனங்கள் தொடர்பானவற்றிற்கும் தனிப்பட்டோர் வழக்குகளைக் கேட்டுப் பரிகாரம் காணவும்

பொதுவாகவே உள்ளார்கள். நிலம் துண்டுபட்டுள்ள நிலையில் நிலஉடைமைக்காரர்கள் பல்லாயிரவரும், பயிர் செய்யும் குடிமக்கள் பல்லாயிரவருமாக எண்ணிக்கையில் உள்ளபடியால் இவர்களிடையே ஏற்படும் வழக்குக்களும் பல்லாயிரமாகப் பெருகி உள்ளன. ஆகவே இதனை, விசாரித்து முடிவு காண்பதில் காலம் அதிகம் ஆகிவிடுகிறது. இதன் காரணமாக அறநிறுவனங்கள் குத்தகைத்தொகைகளைப் பெறுவதிலும் அவற்றிற்காக இட்டுள்ள வழக்குகளில் முடிவு காண்பதிலும் கால தாமதம் ஏற்படுகிறது. பொருள் முட்டுப்பாடும் ஏற்படுகிறது. இப்போது நமது தமிழ்நாட்டு அறநிறுவனங்களில் நிர்வாகத்தை மேற்பார்வையிடுவதற்கு என்று தனியாக இந்து சமய அறநிலையத்துறை என்ற ஒரு அமைப்பும் இருக்கிறது. இத்துறையில் உள்ள அதிகாரிகளிடமே அறநிறுவனங்கள் சம்பந்தப்பட்ட நில வழக்குகள் ஒப்படைக்கப்பட்டால் இந்தத் துறையினர் பொது நிர்வாகத்துக்குப் பயன்படுவதுபோல, இந்த அறநிறுவனங்களுக்கும் நிலத்திலிருந்து வரவேண்டிய வருவாய்களைப் பெருக்கவும் குத்தகைத் தொகைகளைப் பெறுவதில் உள்ள காலதாமதத்தையும் இடர்ப்பாடுகளையும் களைந்து இந்தநிறுவனங்களுக்கும் குடிமக்களுக்கும் பிணக்கு இல்லாத ஒரு இணைப்பை உண்டாக்கி, அறநிறுவனங்களுக்கும் அவற்றின் நிலங்களில் சாகுபடி செய்யும் குடிமக்களுக்கும் கசப்பின்றி நல்லுறவையும் பக்தி விசுவாசத்தையும் வளர்க்க இயலும்.

## அரசும் இலாகாவும் ஆவனசெய்வதாக :

இப்போதே இந்து சமய அறநிலையச் சட்டத்தில் ஆலயக் கட்டிடங்களில் ஆக்ரமிப்புச் செய்வோரை அப்புறப்படுத்த இந்தத்துறை அதிகாரிகளுக்குச் சில அதிகாரங்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. அதைப்போலவே நிலவருவாய்க்கான அதிகாரங்களும் இந்தத் துறை அதிகாரிகளிடமே இருந்தால் பயனுடையதாக இருக்கும் என்று கருதப்படுகிறது. இவ்விதமாகச் சிந்தித்து நமது அரசும் அறநிலையத் துறையினரும் இதற்குத் தக்க வழியில் நிலச் சீர்திருத்தச் சட்டங்களில் பொருத்தமான திருத்தங்களைச் செய்து நமது அறநிறுவனங்கள் செம்மையாக உரிய முறையில் இயங்குவதற்கு ஆவன செய்தால் நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் அறநிலையங்களுக்கும் நலம்பல விளையச் செய்யலாம் என்பது உறுதி. இங்ஙனம் தமிழக அரசும் அறநிலைய இலாகாவும் ஆவன செய்வார்கள் என எதிர்பார்ப்போமாக.

# “ஞானசம்பந்தம்”

ஞானசம்பந்தம், கடந்த முப்பத்திரண்டு ஆண்டுகளில் பெருமிதப்படத்தக்க சாதனைகளைப்புரிந்து முப்பத்துமூன்றாவது ஆண்டில் அடி எடுத்து வைக்கிறது. சைவ சமயச் சார்புடைய ஏடுகளில் ஞானசம்பந்தத்தின் தனிச் சிறப்பினையும் பணிகளையும் சைவ – உலகமும் – தமிழ் உலகமும் நன்கு உணரும். திருமுறை - சாத்திரம் – இலக்கியம் – இலக்கணம் – கவிதை – கட்டுரை போன்ற பல்வேறு துறைகளில் ஞானசம்பந்தம் குறிப்பிடத்தக்க சாதனைகளை அடக்கமாகவும் – அதேநேரத்தில் ஆழமாகவும் செய்துவரும் அருமைப்பாட்டைக் கற்றறி உலகம் பாராட்டி மகிழ்கிறது.

தருமையாதீனம் 24 வது குருமகாசந்நிதானம் அவர்கள் தொடங்கியருளிய இவ்விதழை 25 ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் பல்வேறு வகைகளில் பயன்தரும் ஏடாகப் போற்றிப் புரந்தருளினார்கள். இதுபோது தருமையாதீனம் 26-வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ‘ஞானசம்பந்தம்’ இதழின் நிலையான வளர்ச்சியில் பெருநாட்டங்கொண்டு, ஆயுள் உறுப்பினர்களைச் சேர்ப்பித்து நிலையான பணிக்கு வழிவகுத்துள்ளார்கள். சமயக் கருத்துக்கள், எளிமையாகவும் இனிமையாகவும் விளக்கப்பட்டு, எளியோரும் உணரும் வண்ணம் வெளிவருதல் வேண்டுமென்பதில் ஆர்வங்காட்டியும் அவ்வப்போதும் அருளாசி வழங்கியும் புரந்தருளும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் பொன்னார் திருவடிக்கமலங்களுக்கு, எங்கள் மனம் மொழி மெய்களால் ஆகிய வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஞானசம்பந்தத்தின் வளர்ச்சிக்குத் தங்கள் ஆழ்ந்த - சொல்லோவியங்களால், கவிதை - கட்டுரைகள் வழியே ஊக்கமூட்டி வந்த அன்பர்கள், மேலும் மேலும் எளிமையாகவும் - சுருக்கமாகவும் செய்திகளை வடித்துத் தந்து ஞானசம்பந்தத்தின் பணியில் தொடர்ந்து பங்கேற்க வேண்டுகிறோம். புதிய நோக்கில் சமயக் கருத்துக்கள் எளிமையாக விளக்கப்பெற வேண்டுமென்ற ஞானசம்பந்தத்தின் குறிக்கோளைக் கட்டுரையாளர்கள் நினைவோடு போற்றுவது சிறப்பாகும். அவ்வகையில், ஞானசம்பந்தம் இதழுக்குக் கட்டுரைகள் முதலியவற்றை வழங்கிவரும் அறிஞர்களுக்கும் எங்கள் உளமார்ந்த நன்றி உரியது. சென்ற ஆண்டுகளைப் போலவே இவ்வாண்டிலும் அன்பர்கள் ஞானசம்பந்தத்தைத் தொடர்ந்து பெற்று வருவதுடன், மற்றும் பலரையும் பெறச்செய்து சமயப்பணி தமிழ்ப் பணி முதலிய பலவற்றிற்கும் உதவி, பயன்பெறுமாறு செய்விப்பார்களாக. வருக புத்தாண்டு ! வளர்க ஞானசம்பந்தம் !!

ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணியின்
இரண்டாவது ஆண்டுக் குருபூஜை விழாவில்
திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
26 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரிமாசாரிய சுவாமிகள்
வழங்கியருளிய

# ஆசியுரை

"அடியனேன் அறிவிலாமை கண்டும்என் அடிமை வேண்டிப்
படிமிசைக் குருவாய்வந்து பவவினை நீக்கி ஆண்டுக்
கடிபொழில் தருமைமேவிக் கயிலையைக் கண்டுவந்து
விடிவெள்ளி விழவுங்கொண்ட விமலசற்குருவே போற்றி"

## வழிகாட்டும் வள்ளல் :

மெய்யன்பர்களே! இன்று கயிலைக்குருமணி அவர்கள் பரிபூரணம் அடைந்த இரண்டாவது ஆண்டு குருபூஜைத் திருநாள். இந்த நல்ல நாளில் நாமெல்லாம் இங்கே ஒன்றாகக் கூடி, அவர்களைப்பற்றி நினைப்பதும், பேசுவதும் நம்மை நாம் உயர்த்திக் கொள்வதற்காகவேயாகும். பெரியவர்களுக்கும் உயர்ந்தோர்களுக்கும் இறைவன் தாமே ஞானம்வழங்கி நல்லருள் கூட்டுவிக்கிறான். இறைவன் அருள்பெற்ற நல்லாசிரியர்கள் நம்மை ஒத்தவர்களுக்கு நல்வழிகாட்டி இறையருள் கூட்டுவிக்கும் வள்ளல்களாகத் திகழ்கின்றனர். இருந்தும் நாம் இதனை உணர மாட்டாமையினால் ஆசிரியர்களைப் போற்றாது கெடுகின்றோம்.

## நன்மையும் தீமையும் :

தமிழ் மூதாட்டியாகிய ஔவையார் இதனை அழகாக ஒரு சிறிய பாட்டில் விளக்கியிருக்கிறார்.

"நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே—நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்றே"

நல்லாரோடு கூடுவதும் அவர்சொல் கேட்பதுவும், அவர்களது இணக்கமும் நமக்கு உயர்வு தருமாயினும், இவ்வுயர்வு உரம் பெற வேண்டுமானால் சிலவற்றை நீக்கவும்வேண்டும் என்று அறிவுறுத்துகிறார். அதுவும் நான்கு ஐந்து பாடல்கள் தள்ளிச் சொன்னாலும் நாம் கெட்டுப் போவோமென்று அடுத்த பாட்டிலேயே சொல்லுகிறார்.

> " தீயாரைக் காண்பதுவும் தீதே திருவற்ற
> தீயார்சொல் கேட்பதுவும் தீதே தீயார்
> குணங்கள் உரைப்பதுவும் தீதே அவரோடு
> இணங்கி இருப்பதுவும் தீதே."

உலகில் தீயதுதான் விரைவாகப் பரவுகிறது. நன்மைகள் பரவுவதற்கு நாட்கள் பலவாகின்றன. திருவள்ளுவரும் பெரியாரைத் துணைக்கோடல் என்ற ஒரு அதிகாரம்வைத்து, தீயார் நட்பை விலக்கவேண்டுமென்பதற்காகச் சிற்றினம் சேராமை என்ற அதிகாரத்தையும் உடன் வைத்துள்ளது இக் கருத்தை வலியுறுத்தவேயாகும். மிக உயர்ந்த நிலையில் உள்ள பெரியவர்களிடையே கருத்தொற்றுமை இருக்கும் என்பதற்கு இவை சான்றாக விளங்குகின்றன.

### மன வளர்ச்சியே மனித வளர்ச்சி :

மனிதன் உயரவேண்டும்: மனித எண்ணங்களும் உயர்ச்சி பெறவேண்டும். உடல் வளர்ச்சியைவிட உள்ள வளர்ச்சியே முக்கியமானது. உள்ள வளர்ச்சிக்கு நம்முன்னோர்கள் பல வழிகளை எடுத்துக்காட்டி விளக்கிஇருக்கின்றனர். உலகினர் பணம் பண்ண அறிந்துள்ளனர். மனம்பண்ண அறியவில்லை. இதனைப் பாரதியாரும்,

> ' துணிவெளுக்க மண்ணுண்டு எங்கள்முத்து மாரி
> மனம் வெளுக்க மருந்தில்லை எங்கள்முத்து மாரி '

என்று பாடுகின்றார். நம்மை நாம் தூய்மைப்படுத்திக்கொள்ள வேண்டும். இதற்கு எளியவழி சான்றோர்களோடும் உயர்ந்தோரோடும் இணங்கிவாழ்வதேயாகும். மணிவாசகப்பெருமானும்,

" அடியேன் நின்னடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய் "

என வேண்டுவது இக்கருத்துக்கு அரணாகிறது.

### கயிலைக் குருமணி கருணைக் குருமணி :

நமது கயிலைக்குருமணிபோன்ற பெரியோர்களை - குருநாதர்களை வழிபட்டால் நாம் உய்யலாம். அவர்கள் கருணையின்

வடிவாகவே விளங்கினர்கள். தவறு செய்தவர்களிடமும் அவர்கள் கருணை குறையவில்லை. வெளியே பார்த்தால் கடுமைபோல் தோன்றும் - உள்ளம்கருணையினல் நிறைந்திருக்கும். 'கடிதோச்சி மெல்ல எறிக' என்ற குறட்கருத்துக்கு அவர்கள் வாழ்க்கை இலக்கியமாக அமைந்திருந்தது. இரண்டுங் கலந்த தனி அமைப்பு அவர்களிடம் இருந்தது.

அவர்கள் திருவருள் வாழ்வில் பலவும் வியப்பாகவே அமைந்தது. நாம் ஆழமாகச் சிந்தித்தபோது பலஉண்மைகள் விளக்கமுற்றன. அவர்கள் அவதரித்தது முத்தித்தலமாகிய சிதம்பரம். பரிபூர்ணம் அடைந்ததோ காசியில். அவர்கள் பிறந்ததும் ஐப்பசித்திங்களில்; மறைவும் அதே ஐப்பசியில். இப்படிப் பல இயைபுகள் உள்ளன. இன்று கயிலைக்குருமணி அவர்கள் இருந்திருந்தால் 60 ஆவது ஆண்டுத் தொடக்க விழாவினைக் கொண்டாடுவார்கள். திருவருள் நமக்குக் கொடுத்துவைக்க வில்லை.

## அடியார்க்கு அடியராம் அன்புள்ளம் :

அவர்கள் துறவுநிலைபூண்டு, குருமகாசந்நிதானமாக விளங்கியபோதிலும் துறவிகளையும் அடியார்களையும் பாராட்டிப் போற்றும் பண்பினை உடையவர்களாக விளங்கிவந்தார்கள். எல்லார்க்கும் நன்றும் பணிதல் என்பதனைக் கடைப்பிடித்து வாழ்ந்து காட்டினர்கள். கேதார தரிசனத்தில் 'பலாரிபாபா' என்ற பெரிய துறவியை இருப்பிடம் தேடிச் சென்று கண்டு போற்றினர்கள். காசியாத்திரையில், அரித்துவாருக்கு எழுந்தருளியபோது ரிஷிகேசம் சென்று சிவானந்தரைக் கண்டதோடு அல்லாமல் அவர்களுக்கு உதவவேண்டுமென்ற எண்ணத்தில் விலை மதிக்கமுடியாத தமது கடிகாரத்தைப் பிறர் அறியாமல் வழங்கிவந்தார்கள். அதேபோல் திருக்குற்றாலத்திலும், மலைமீது 'புற்றடிசந்நியாசி' என்றொரு பெரியவர் இருப்பதைக் கேள்வியுற்று கடத்தற்கு அரிய பாதைவழிச்சென்று அவரைக் கண்டுவந்தார்கள். இதுபோலக் காசியிலும் ஒவ்வொரு முறை எழுந்தருளும்போதும் நூற்றுக்குமேற்பட்ட சாதுக்களுக்குப் பண்டாரா எனப்படும் மாகேஸ்வரபூஜையைத் தாமே முன்னின்று அவர்களுக்கு மாலை அணிவித்துச் செய்விக்கும் நியமமுடையவர்களாகவே இருந்தார்கள். அவர்கள் குருமகா சந்நிதானமாயினும் தம்மளவில் தம்மை ஓர் சாதாரண மனிதராகவே கருதினர்கள். தமது ஈடேற்றத்திற்குத் தம்மளவில்மனிதராக - ஓர் பக்தராகவே அவர்கள் தம்மைக்கருதி வாழ்ந்தார்கள்.

### வாழ்த்துவோம் வாழ்வோம் :

கயிலைக் குருமணி அவர்கள் தொட்டது துலங்கும் என்ற உண்மை உலகறிந்ததாக இருந்தது. அவர்கள் ஹஸ்த நட்சத்திரத்தில் அவதரித்தார்கள். அவர்களது ஹஸ்தவிசேடத்திற்கு எடுத்துக்காட்டாக எவ்வளவோ நிகழ்ச்சிகளை எடுத்துக்காட்ட முடியும். அவர்கள் தொட்டது துலங்கியதோடு விட்டது விளங்குவதையும் இங்கே நாம் காணுகிறோம்.

இந்தக் குருபூஜைத் திருநாளில் குருமணி அவர்களைப் போற்றுவதன் மூலம் நாமே நம்மை உயர்த்திக்கொள்ளுகிறோம். இறைவனை நாம் வாழ்த்துவதும் நம்மைவாழ்வித்துக்கொள்ளவே என்பதை மாணிக்கவாசகரும் விளக்குகின்றார். தாயுமான அடிகள் இதனைப் பொன்னின்மேல் வைத்துக் கூறுவார். பொன்னை அணிந்துகொள்ளுவதனால் பலவித நன்மைகளையும் பெறுவது நாமேதவிர பொன்னல்ல. அதுபோல இறைவனை வணங்குவதனால் நாமே பயன்பெறுகிறோம் என்பதையும் விளக்குகின்றார். எனவே, இத்தகு வழிபாடுகளால் ஒரு நூலளவாவது நாம் உயர்ந்தோமானால் அதுவே அவர்களுக்கு மகிழ்வாகும்.

### தாரகையும் தண்மதியும் :

தருமையாதீனத்தின் அருளாட்சியில் திகழும் 27 திருக்கோயில்களையும் 27 விண்மீன்களாகவும், நமது ஆதீனத்தை முழுநிலவாகவும் உருவகித்துப் பலரும் குறிப்பிடுகின்றனர். தாரகை நடுவண் தண்மதிபோல் தருமையாதீனம் விளங்குவது உண்மையாயினும் - இதன் உண்மையான அடிப்படையை நாம் சிந்திக்கவேண்டும். வானத்தில் சிறிதாகத் தோற்றங்காட்டும் விண்மீன்கள் சந்திரனைவிடப் பன்மடங்கு பெரியவை; அத்தோடு அவை சுயமாக ஒளிவிடும் தன்மையுடையன என்பது விஞ்ஞானம் கண்ட உண்மையாகும். ஆனால், சந்திரனே சூரியனின் ஒளியை வாங்கிப் பிரகாசிக்கும் தன்மையுடையது இங்ஙனம் நமது அருளாட்சிக்கு உட்பட்ட திருக்கோயில்கள் விண்மீன்கள் போல விளங்கும் சிறப்புடையன. ஒளியை வாங்கிப் பிரதிபலிக்கும் சந்திரன்போல திருக்கோயில்களின் ஆசியில் ஆதீனம் அன்று தொட்டு இன்றுவரை எண்ணற்ற அருளறப்பணிகளை இயற்றித் தண்ணிலவாக ஒளிவிடுகின்றது. என்றென்றும் அவற்றின் இணைப்பும் ஆசியும் ஆதீனத்தின் பணிகளுக்கு இன்றியமையாது வேண்டத்தக்கதாகும். அன்பர்கள் இதனை நன்குணர்ந்து, ஆதீன அருளறப் பணிகளில் ஈடுபாடுகொண்டு திருவருளும் குருவருளும் பெற்று உய்வார்களாக.

உ

சிவமயம்

ஞானசம்பந்தம் இதழின் முப்பத்து மூன்ருவது

# புத்தாண்டு வாழ்த்து

## புலவர் திரு. இரா. செல்வக்கணபதி

அறியாமை இருளகற்றி மக்கள் நெஞ்சில்
அறிவூட்டும் பணிக்கேதும் ஈடு இல்லை
திருநாட்டின் நலமெல்லாம் தெய்வக் கொள்கை
தேர்ந்திட்ட ஞானத்தால் விளைந்த தாகும்
அன்பூற்றித் தமிழ்மக்கள் நெஞ்சில் அல்லால்
இன்பூற்றிப் பிறநாட்டார் உள்ளத் துள்ளும்
இறைஞானம் தமிழாலே எடுத்துச் சொல்லி
நிறைவிக்கும் தமிழேடு; நாலெட் டாண்டு
சிவஞானத் தேன்பாய்ச்சி அருள்ப ழுக்கச்
செய்திட்ட பெருந்தொண்டை அறியார் யாரே ?
ஊனத்தின் சம்பந்தம் உடைக்கும் நோக்கில்
ஞானத்தின் சம்பந்தம் நாளும் நல்கி
முன்னேடி ஏடாக அருளிப் பாட்டை
தென்னுடு செழித்தோங்க வழங்கிச் சைவ
நன்னுமம் உலகெல்லாம் விளங்கி மக்கள்
என்னுளும் இன்பத்தில் செழிக்கச் செய்யும்
ஞான சம் பந்தத்தின் பணிகள் முன்போல்
நடையிட்டுச் செழித்தோங்க அன்பர் எல்லாம்
செந்தமிழால் தேனுறு பாய்ச்சும் ஏட்டை
சிறப்பான அருள்நல்கும் ஞானப் பூவை;
வருவித்துக் கற்றுணர்ந்து மேன்மை எய்தி
வாழ்கவென வாழ்த்துகின்ேறும் ! புதிய ஆண்டில்
பல்வேறு நலமெல்லாம் பொலியும் வண்ணம்
பார்போற்றும் சீரேடு விளங்கித் தோன்றும்!

# அருட்சுடர்க் காட்சி

தருமையாதீனப் புலவர், சித்தாந்தக் கலைமணி

திரு. சி. அருணைவடிவேல் முதலியார்

எப்பொருளிலும் நிறைந்து நிற்கின்ற இறைவனுக்கு உலகமே திருமேனியாகும். இதுவே அட்டமூர்த்தம் எனப் படுகின்றது. உலகப் பொருள்களாகவே காணும் பொழுது அவை அறிவற்ற மாயா காரியங்களாய் அறிவை மயக்கி அல்லலில் வீழ்த்துவனவாய் இருக்கும். அவைகளையே இறைவன் திருமேனியாகக் காணின் அவை இறைவனது அருள் வடிவாய் நின்று, மயக்கத்தைப் போக்கி மெய்யுணர்வைத் தந்து, பேரின்பத்தை அளிப்பனவாய் விளங்கும். இதனையே திருமூலர்

" மரத்தை மறைத்தது மாமத யானை;
மரத்தில் மறைந்தது மாமத யானை;
பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்;
பரத்தில் மறைந்தது பார்முதல் பூதமே "

என அழகுபட விளக்குகின்றார்.

'உலகப் பொருள்கள் - பார்முதல் பூதங்கள் இறைவனுக்குத் திருமேனியாவன' என்பதைப் பலர் அறிய மாட்டார்கள். அறிந்தோர் சிலரும் அந்நிலையில் நிற்க மாட்டாது அதனை மறப்பவரேயாவர். ஆகவே, அந்த உண்மை அறிவை அனைவர்க்கும் உண்டாக்குதற் பொருட்டு இறைவன் அந்தப்பஞ்சபூதங்களையே இலிங்கத் திருமேனியாகக் கொண்டு விளங்கும் தலங்கள் தமிழ் நாட்டில் திகழ்கின்றன. அவை பஞ்ச பூதத் தலங்கள், எனப்படுகின்றன. திருவாரூர், திருவானைக்கா, திருவண்ணாமலை, திருக்காளத்தி திருத்தில்லை என்னும் ஐந்தும் பார், நீர், தீ, காற்று, வானம் என்னும் பஞ்சபூதத் தலங்களாம். காஞ்சியையும் பிருதிவித் தலமாகக் கூறுதலுண்டு.

அட்ட மூர்த்தங்களில் ஒளி வடிவாய் யாவரும் அறிகின்ற நெருப்பே இறைவனுக்குச் சிறந்த திருமேனி. அதனால், பஞ்சபூதத் தலங்களில் தேயுபூதத் தலமாகிய திருவண்ணாமலை சிறப்புடையது. 'சோம வாரத்திற்குமேல் விரதம் இல்லை; சோணா

சலத்துக்குமேல் தலம் இல்லை" எனச் சோமவார விரத கற்பம் என்னும் நூல் கூறுகின்றது.

சோணசலம், அருணசலம், அருணை முதலாகப் பல பெயர்களைப் பெற்று விளங்கும் திருவண்ணமலை மற்றும் பல பெருமைகளை உடையது. 'அருணம், சோணம்' என்னும் இரு சொற்களும் 'சிவப்பு' என்னும் பொருளைத் தந்து அக்கினியைக் குறிக்கும். மால், அயன் என்பவர்க்கு முன் இறைவன் இத்தலத்தில் அக்கினிப் பிழம்பாய்த் தோன்றியதே இலிங்கோற்பவமாகும். மால் அயன் இருவராலும் அடி முடி தேடி அறியப்படாமையால் இறைவனது முதலும், முடிவும் இல்லாத நிலையை இத்தலம் என்றும் யாவர்க்கும் விளக்கி நிற்கின்றது. மற்றைய தலங்கள் உலகமே பொருள் என மயங்கும் பாசஞானத்தை நீக்குவன. அண்ணமலை, 'நானே பிரமம்' என்னும் பசுஞானத்தை அன்று மால், அயன் இருவர்க்கும் நீக்கியதுபோல என்றும் யாவர்க்கும் நீக்கிப் பதிஞானத்தைத் தருவது. 'அண்ணமலை நினைக்க முத்தி தருவது என்பதும் பதிஞானத்தின் வழி நினைப்பதே யாகும். "நினைத்துத் தொழுவார் பாவம் தீர்க்கும் நிமலர் உறைகோயில் .........அண்ணமலை" என்ற ஞானசம்பந்தர் திருவாக்கும் உணரத்தக்கது.

பிரம விட்டுணுக்களுக்கு அக்கினிப் பிழம்பாய்த் தோன்றி என்றும் இங்குத் தேயு லிங்கமாய் விளங்குகின்ற இறைவன் கலியுகத்தார்க்குக் கல்மலையாய்த் தோன்றினும், 'கார்த்திகை மாதத்தில், கார்த்திகை நட்சத்திரத்தன்று மலை உச்சியில் அருட் சுடர்க் காட்சி வழங்குவோம். அதனைத் தரிசித்தோர்க்கு எல்லா நலங்களும் உளவாகும்' என்று பிரம விட்டுணுக்களுக்கு வரம் கொடுத்தான் என்பதை இத்தலபுராணம் பின் வருமாறு கூறுகின்றது.

"கார்த்திகைக்குக் கார்த்திகைநாள் ஒருசோதி
மலைநுனியிற் காட்டா நிற்போம்;
வாய்த்தஅந்தச் சுடர்காணின் பசிபிணி
இல்லாதுலகில் மன்னி வாழ்வார்;
பார்த்திபர்க்கும் அருந்தவர்க்கும் இடையூறு
தவிரும்இது பணிந்தோர் கண்டோர்
கோத்திரத்தில் இருபத்தோர் தலைமுறைக்கு
முத்திவரம் கொடுப்போம் என்றார்"

அருணசலத்தில் இவ்வாறு ஆண்டுதோறும் இறைவன் வழங்கும் அருட்சுடர்க் காட்சி எல்லா நலங்களையும் வழங்குவதே

யாயினும் பசுஞானத்தைப்போக்கிப் பதிஞானத்தை வழங்குவதே சிறப்பாதல் பற்றி அதனை, 'ஞான தீபக் காட்சி என்றே வழங்குவர்.

இத்திருக்கார்த்திகைத் தீப விழா எல்லாச் சிவாலயங்களிலும் நடைபெறுவதாயினும் மேற்கூறிய வகையால் அண்ணாமலைக்குச் சிறப்புடையதாகின்றது. திருஞானசம்பந்தர் தமது பூம்பாவைத் திருப்பதிகத்தில், "கார்த்திகை விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்" என அருளிச்செய்தமையால் இத்தீப தரிசனம் இன்றியமையாது செய்யத்தக்கது என்பது நன்கு விளங்கும்.

திருக்கார்த்திகைத் தினத்தன்று எல்லாச் சிவாலயங்களிலும் சுடக்கப் பனை கொளுத்தப்படுதல் இறைவன் திருவண்ணாமலையில் அனற்பிழம்பாய்த் தோன்றியருளியதையே குறிப்பது. இந் நாளில் நாடெங்கும் நிரம்ப விளக்குக்களை ஏற்றிவைத்து இறைவனது ஒளி வடிவை நிரம்பக் கண்டு வழிபடுதல் மரபாய் இருத்தலும் அறியத்தக்கது. ஆகவே இத்திருக்கார்த்திகை நாளில் சிவபெருமானது அருட்சுடர்க் காட்சியை எங்கும் - சிறப்பாக அண்ணாமலையில் தரிசித்தோர் இம்மை, மறுமை, வீடு என்னும் முப்பயனும் பெற்று இன்புறுதல் எண்ணி மகிழத்தக்கது.

அட்டைப்பட விளக்கம்.

அண்மையில் மார்கழித்திங்கள் வருகிறது. மார்கழித் திங்கள் தேவர்களுக்கு விடியற்காலம். நமக்கும் தைமாதம் முதலாகத் தொடங்கும் ஆண்டிற்கு இம்மாதம் விடியற்கால மாக கருதப்படுகிறது. இத்திங்களில் அனைவரும் வைகறையில் எழுந்து, சீதப்புனலாடி, சிற்றம்பலம்பாடி மணிவாசகர் அருளிய திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி ஆகிய நூல்களை ஓதி மலரிட்டு இறை வழிபாடு செய்து இன்புறுவார்களாக. மார்கழியில் தில்லைப் பெருமான் திருக்காட்சி வழங்கும், சைவர்களின் மிகச்சிறந்த திருவாதிரைத்திருநாள் வருகிறது. அன்பர்கட்கு நினைவூட்டுதற் பொருட்டு மணிவாசகர் நாட்காலை நீராடி தில்லைக் கூத்தன் திருவடிகளில் மலரிட்டு வணங்குவதோடு, தாமருளிய திருவாசகம், திருக்கோவையார் என்னும் திருவளர் தாமரைகளை ஆனந்தக் கூத்தன் அடிமலர்களில் சாத்தும் அரியகாட்சியை அட்டைப் படத்தில் பார்க்கிறோம். இந்நாட்களில் நாமும் ஆனந்தக் கூத்தன் அடிமலர் பரவி உய்வோமாக.

# கௌமாரம்

ஸாஹித்யகர்த்தா, ஸம்ஸ்க்ருத விமர்சகர்

ஸ்ரீ. T. இராமலிங்க தீக்ஷிதர், M. A., M. Litt.

வேத காலத்தில் மக்கள் இறைவனை இயற்கை வடிவில் உருவமின்றி வழிபட்டனர். ஞானிகளும், யோகிகளும் தியான நெறியால் ஜோதிவடிவில் தங்கள் இதயகமலத்தில் ஈசனைக் கண்டனர். இதையே உபனிஷத்தில் "தஹரவித்யா" "தஹரோபாஸனை" எனக் கூறப்பட்டுள்ளது. புராண காலத்திலிருந்துதான் உருவ வழிபாடும், ஈசனின் பல வடிவங்களும், பெயர்களும் தோன்றலாயின. சூரியன், கணபதி, ஸ்கந்தர் சிவம், சக்தி, விஷ்ணு இவர்களுடைய வழிபாடு சிவாலயங்களிலும் ஆன்மார்த்த பூசைகளிலும் செய்யப்பெறுகிறது ஸ்ரீசங்கர பகவத்பாதாள் "பஞ்சாயதனபூஜை" என்ற முறையை அமைத்துத் தந்தார். அதன்படி சிவ(லிங்கம்), விஷ்ணு (ஸாலக்ராமம்), சக்தி, கணபதி, சூரியன் (அவரவர் குலதெய்வம் நடுவில் அமைந்திருக்கும்) ஆகிய மூர்த்திகள் வழிபாட்டில் அமைந்திருக்கும். ஸ்ரீ ஸ்கந்தனும் சிவசக்தி ஸ்வரூபங்களில் மறைமுகமாக இருப்பதை அறியலாம். அதுதான் ஸோமாஸ்கந்த வடிவம்.

ஸ்ரீ சங்கரர் சைவம், வைஷ்ணவம், சாக்தம் காணபத்தியம் கௌமாரம், ஸௌரம் என்று சமயங்களை ஆறுக வகைப்படுத்தி விளக்கினர். வித்யாரண்யர் என்பவர் ஆறு சமயங்களையும் பக்தி நெறியின் சாஸ்திர நூல்களாகக் குறிப்பிட்டுள்ளார்.

"शैवं वैष्णवं शाक्तं सौरं वैनायकं तथा ।
स्कान्दं च भक्तिमार्गस्य दर्शनानि षडेव हि ॥"

திருமுருகனை முழுமுதற் கடவுளாக வழிபடும் முறைமைக்கு, "கௌமாரம்" எனப்பெயர். இதைப்பற்றி ஈண்டுச்சற்று ஆராய்வோம் :

கௌமார சமயம், வேத புராணங்களுக்கும் அப்பாற்பட்ட ஞானபரம்பொருளே கருணையே வடிவமாக அவனியில்

யாவரையும் உய்விக்க ஆறுமுகக் கடவுளாக அவதரித்தார் எனக் கூறுகின்றது. சிவசக்தியின் ஒருமைப்பாடுதான் முருகதத்துவம்; முருகனைப் பரமாத்மாவாக வழிபடுவதுண்டு. சிவபிரானே ஆறு முகங்களுடன் முருகனுக விளங்குவதாகவும் வழிபடுவது மரபு, சைவ வைணவர்களின் இணைப்புப்பாலம் போன்றது "முருகத் தத்துவம்". சிவசக்திவடிவில், சக்தி புருஷவடிவில் திருமால் ஆகிருர். பார்வதி திருமாலின் சகோதரி; ஆகவே முருகன் விஷ்ணுவின் மருமகனுக – "திருமால் மருகன்" ஆகின்ருன்.

ரிக்வேத காலத்தில் யாகங்களில் 'ஸுப்ரஹ்மண்யோம்' என அழைக்கப்படுகிருர். காஞ்சிப்புராணத்தில்,

"முக்கனல் சூழ் வேள்வியில் ஸுப்ரஹ்மண்யோமெனவும்
முக்கால் கூறும்."

முருக பக்தியால் கலியுகத்தில் எல்லாப் பாபங்களிலிருந்தும் விலகிப் பேரின்பத்தை அடையலாம்.

स्कान्दे —

"स्कन्दस्य कीर्तिमतुलां कलिकल्मषनाशिनीम् ।"

வைணவத்தில் குழந்தைத் தெய்வம் கண்ணன். சைவ சமயத்தில் குழந்தைத் தெய்வம் பாலமுருகன்.

ஸ்ரீமத் ராமாயணத்தில் விச்வாமித்ர முனிவர் ராமலக்ஷ்மணர் களுக்கு முருகனின் பெருமையைக் கூறுகின்ருர். 'பூமியில் எவ ஞெருவன் முருகனிடம் அளவிலாப் பக்தியைச் செலுத்துகின் ருனே, அவன் நீண்ட ஆயுளுடன் கூடிய மக்கட்பேறு பெற்று, இன்புற்று முருகன் திருவடியை அடைந்து கீர்த்தியுடன் விளங்கு வான்" என,

"भक्तश्च यः कार्तिकेये काकुत्स्थ भुवि मानवाः ।
आयुष्मत्पुत्रपौत्रैश्च स्कन्दभक्ताग्रजां व्रजेत् ॥"

முருகன் தளபதியாகவும், வீரத்திருமகனுகவும் விளங்குகின்ருன்.

स्कान्दे —

"आक्रम्य च यतोऽस्कन्दद्विक्रमेण जगत्त्रयम् ।
तेन स्कन्दोऽयमाख्यातः सुतस्ते गिरिसंभवे ॥"

भारते - गीतायां - विभूतियोगे —

" सेनानीनामहं स्कन्दः । "

வட இந்தியாவில் ப்ரஹ்மசாரியாக " கார்த்திகேயன் " என்ற பெயரில் விளங்குகின்ருன். வரலாற்று நூல்களை ஆராயும் போது ' முருக தத்துவம் ' கி. மு. ஐந்தாம் நூற்ருண்டிலிருந்தே இருப்பதாக அறியமுடிகிறது. குஷாண அரசர்கள் ஸ்கந்த பக்தர்களாக இருந்தனர். பல்லவ மன்னர்களும் முருகனை முதன்மைத் தெய்வமாகக் கொண்டனர். சில அரசர்கள் பெயரில் " ஸ்கந்த குமார " என கூறப்பட்டுள்ளது. குஷாண மன்னர்கள் நாணயங்களில் ' ஸ்கந்த முத்திரை ' காணப்படுகிறது. காமிகம், காரணம், ஸுப்ரபேதம் முதலான ஆகம நூல்களும் முருகன் வழிபாட்டினை நன்கு விவரிக்கின்றன

தமிழ் இலக்கியத்தில் முருகப்பெருமான் தமிழர் தெய்வமாகத் திகழ்கின்ருர். அகத்திய முனிவருக்குத் தமிழை அருளியவர் திருமுருகன். திருஞானசம்பந்தரை முருகன் திருவவதாரமாகக் கூறுவது உண்டு. குமர குருபரர் முருகனை " சங்கத் தமிழின் தலைமைப்புலவ "னைக் கூறுகின்ருர். குறிஞ்சிநிலத் தலைவன் திருமுருகன். முதல் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் " குழந்தைத் தெய்வமாகக் " கூறப்படுகிருர்.

" சேயோன் மேயமைவரை உலகமும் "

பரிபாடலில் வீரத்திருமகனுக முருகன் யானைமீதமர்ந்து விளங்குதல் கூறப்பட்டுள்ளது.

" மணிமயில் உயரிய மாறு வென்றிப்
பிணிமுக ஊர்தி ஒண் செய்யோனும்
முருகொத்தீயே முன்னியது முடித்தலின் "

திருமுறைகளில்: திருஞானசம்பந்தர் :- பிரமபுரப் பதிகத்தில் முருகனை ' இளங்குமரன் சேந்தன் " என்றும், திருநாவுக்கரசர் :- " குமரர் வணங்கும் கழற்பூரணன் " என்றும், சுந்தர மூர்த்தி சுவாமிகள் :- " குமரன் திருமால் பிரமன்கூடிய தேவர் வணங்கும் அமரன் " என்றும், மணிவாசகர் :- ' உமையாள் திருமகன் முருகன் " என்றும் கூறியிருத்தலைக் காணலாம்.

( தொடரும் )

தருமையாதீனம் 24 ஆவது குருமகாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**



ஞான சப்பந்த நல்லிதழைத் தோற்றுவித்த
ஞான குரவர் நற்றிருத்தாள் போற்றுதுமே.

# உமாபதி சிவமும் சித்தாந்த நுட்பமும்

பண்டித வித்துவான்

திரு. கு. சுந்தரமூர்த்தி எம்.ஏ.,

( மலர் 32, இதழ் 12, பக்கம் 654 இன் தொடர்ச்சி )

சங்கம வழிபாடு :- இவர் அடியவரிடத்து மிகுந்த ஈடுபாடுடையவர். திருமுறை ஆசிரியர்களை அருட்தலைவர் (சங்கற்ப நிராகரணம் - முத்தி மறுப்பு - வரி 41) என்பர். ஞானசம்பந்தரின் திருமுறைகளை,

> " காழி மாநகர்க் கவுணியர் கடவுள்
> ஞான மாகிய நற்பதி கங்கள் " 1

எனச் சிறப்பிப்பர். அன்றியும் திருமுறையாசிரியர்களின் அருளுரைகளைச் சங்கற்ப நிராகரணத்தில் பல இடங்களிலும் பொன் போல் பொதிந்துவைத்துள்ளார். தாமருளிய திருவருட்பயன் என்னும் நூலின் தலைப்புக்கு ஏற்ப அமைந்துள்ள, மூவர் தேவாரப் பாடல்களைத் தொகுத்துத் 'தேவார அருள்முறைத் திரட்டு' என்ற பெயரில் அருளிச் செய்திருப்பதும் அவர்தம் அருளுள்ளத்தைப் புலப்படுத்தும். திருத்தொண்டர் புராண சாரம், திருமுறை கண்ட புராணம், திருத்தொண்டர் புராண வரலாறு ஆகிய பெருநூல்களை அருளியமையும் இவர் அடியவரிடத்துக் கொண்ட பக்தி மாண்பினைப் புலப்படுத்தும். இவ்வாற்றான் இவர்தம் சங்கம வழிபாடு வெளிப்படும்.

முத்தித் தலைவர் :- இம்மூவகை வழிபாடுகளையும் செய்த நம்மருளாசிரியர் முத்தித்தலைவராகவும் விளங்கியுள்ளார். பெத்தான் சாம்பான் என்பான் இவர்தம் திருமடத்திற்கு நாடோறும் விறகு நல்குபவன். அவனுக்கு முத்தியருளுமாறு இறைவன் அருள அதனைச் சிரமேற்கொண்டு இவரும் அப்பெருமகனுக்கு முத்தி அளித்தார். இறைவனே திருமுகப் பாசுரம் கொடுத்தருளப் பெற்ற பெருமை இவருக்குள்ளது. ஒருவர் கழறிற்றறிவார். மற்றொருவர் நம் உமாபதி சிவமாவர். அப்பாடல் வருமாறு :-

> " அடியார்க் கெளியன்சிற் றம்பலவன் கொற்றங்
> குடியார்க் கெழுதியகைச் சீட்டுப் – படியின்மிசைப்
> பெத்தான்சாம் பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து
> முத்தி கொடுக்க முறை "

---

1. சங்கற்ப நிராகரணம் – பேதவாதமறுப்பு - வரி, 22, 23.

இத்தகைய நன்னிலைக்காளாகியநிலையை அறியாதஅப்பெத்தான் சாம்பானின் மனைவி அக்கால உள்ள அரசனிடம் தன் கணவனுரை உமாபதி சிவம் தீயில் உய்த்துவிட்டார் என முறையிட, அவ்வரசனும் இவர்பால் வந்து கேட்க, இவர்தம் உண்மை நிலையை உணர்ந்து அவ்வரசன் இது வாய்மையாயின் பிறிதொருவர்க்கும் இந்நிலை எய்துவித்தருள்க எனக்கூற அது பொழுது பக்குவம் பெற்ற உயிராக சிவலிங்கத் திருமேனியினின்றும் வந்த புனிதநீரை உட்கொண்டு வளர்ந்திருந்த முள்ளிச்செடி ஒன்றேயாக அதனை இவர் திருக்கண் நோக்கால் பார்த்தருளி விடுபேறடையச் செய்தார். இங்ஙனம் தாவில் சராசரங்கள் எல்லாம் உய்ந்தருள அருள்பாலித்தவர் முத்தித்தலைவராகிய நம் உமாபதி சிவமாவார்.

நூல்களைப் பற்றிய சில குறிப்புக்கள் :- இவரருளிய நூல்களாவன. 1. சிவப்பிரகாசம், 2. திருவருட்பயன், 3. வினவெண்பா, 4. போற்றிப் பஃறொடை, 5. கொடிக்கவி, 6, நெஞ்சு விடுதூது, 7. சங்கற்ப நிராகரணம் என்பன உண்மைநெறி விளக்கமும் இவரால் செய்யப்பட்டது என்பதே மரபு. ஆயினும், சீகாழித் தத்துவநாதர் செய்தார் என்பதாக ஒரு வெண்பா உளது. இவற்றுள் சிவப்பிரகாசம், நூறு பாடல்களால்ஆயது. சிவஞானபோதத்திற்குச் சார்பு நூலாயது. சித்தாந்த உண்மைகளை மிகத் தெளிவாக விளக்குவது. திருவருட்பயன், கடவுள் வாழ்த்துச் செய்யுளுடன் 101 குறட்பாக்களை உடையது. பத்து அதிகாரங்களை உடையது. சித்தாந்த நுட்பங்களை அறிய விழைவார் முதற்கண் இந்நூலைப் பயின்று செல்லின் நலம்பயக்கும். வினவெண்பா, பதின்மூன்று வெண்பாக்களால் ஆயது. தம் குருமூர்த்தியிடம் பன்னிரண்டு வினக்களை கேட்கின்றார் இவ்வாசிரியர். மிகச்சிறிய நூலாயினும் அரிய சிந்தனைகள் பலவற்றையும் உளங்கொள்ளச் செய்வது. அடுத்து நிற்பது போற்றிப் பஃறொடையாகும். இதில் இறைவன் உயிர்களைக் கேவலம், சகலம், சுத்தம் ஆகிய மூவகை நிலைகளிலும் எவ்வெவ்வாறெல்லாம் காத்தருள்கின்றான் என்பது தெளிவாகக் கூறப்படுகின்றது. ஒவ்வொரு நிலையிலும் உதவி அருளுகின்ற பெருமானை அவ்வவ்விடங்களிலும் போற்றியென வணங்குகின்றார் ஆசிரியர். அங்ஙனம் அமைந்த போற்றி யென்னும் சொல் பதினன்கு இடங்களில் இடம் பெற்றுள்ளன. தாயின் வயிற்றில் கிடந்த கருவை அங்கே கிடக்கும் ஏனைய கிருமிகள் எங்கே எடுத்து உண்டு விடுமோ என அங்கேயும் காத்தருள்கின்றான் இறைவன் என்பதைக் கூறும்பகுதி நெஞ்சைத் தொடுவதாகும். அப்பகுதி வருமாறு :-

"………நாட்டுகின்ற
எப்பிறப்பும் முற்செய் இருவினையால் நிச்சயித்துப்
பொற்புடைய தந்தைதாய் போகத்துட் — கர்ப்பமாய்ப்
புல்லிற் பனிபோற் புகுந்திவலைக் குட்படுங்கால்
எல்லைப் படாஉதரத் தீண்டியதீப் — பல்வகையால்
அங்கே கிடந்த அனுதிஉயர் தம்பசியால்
எங்கேனு மாக எடுக்குமென — வெங்கும்பிக்
காயக் கருக்குழியிற் காத்திருந்துங் காமியத்துக்
கேயக்கை கால்முதலாய் எவ்வுறுப்பும் — ஆசறவே
செய்து திருத்திப்பின் பியோகிருத்தி முன்புக்க
நையவழி யேகொண் டணைகின்ற — பொய்யாத
வல்லபமே போற்……" 1

சகல நிலையில் அருபரத்தொருவன் அவனியில் வந்து குருபரனு கின்றுன் என்பதையும் அவனிடத்துச் சாயா அன்பினை நாடொறும் தழைப்பவர்க்குத் தாயேயாகி வளர்க்கின்றுன் என்பதையும் மிகவும் அழகாகவும் நயமாகவும் விளக்குகின்றுர். இப்பகுதிகளும் மிகவும் நீள நினைந்து இன்புறத்தக்கவை.

இனி, மேற்கண்ட மூவகை வழிபாட்டையும் மேற்கொண்டார் இடையறுது எண்ணி இன்புறத்தக்கது திருவைந்தெழுத்தாகும். கருத்தின் பயனுக விளங்கவேண்டுவதும் இதுவே. இதுவே அம்பலக் கூத்தனின் திருவுருவில் அமைந்து விளங்குவதும், அப்பெருமானது அருட்செயல்களைப் புலப்படுத்துவதுமாகும். உண்மை விளக்கத்துள் இவ்வருமைப்பாட்டை அவ்வாசிரியர் விளக்குகின்றுர்.

"ஓங்கார மேநல் திருவாசி உற்றதனில்
நீங்கா எழுத்தே நிறைசுடராம் - ஆங்காரம்
அற்றுர் அறிவர் அணி அம்பலத்தான் ஆடலிது
பெற்றுர் பிறப்பற்றுர் பின்" 2

"சேர்க்குந் துடிசிகரஞ் சிக்கனவா வீசுகரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம் - பார்க்கிலிறைக்கு
அங்கி நகரம் அடிக்கீழ் முயலகனர்
தங்கும் மகரமது தான்" 3

---

1 போற்றிப் பஃறெடை 12–18 கண்ணிகள்.

2 உண்மை விளக்கம் – 34.

3 ,, – 33.

"மாயை தனைஉதறி வல்வினையைச் சுட்டுமலம்
சாய அமுக்கியருள் தானெடுத்து – நேயத்தால்
ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தானழுத்தல்
தானெந்தை யார்பரதம் தான்" ‡

ஈனமாம் பிறவி தீர்ந்து யாவரும் உய்தற்குரிய நெறி திருவைந்தெழுத்தை இடையறாது சிந்தித்தலே ஆகும். இதனை ஓதி உய்தற்கு நம்மனம் ஒருப்படுக.

கொடிக்கவி, தில்லையில் ஒரு சமயம் பெருவிழாத் தொடங்கும் நாளில் கொடியேறுதொழிய திருவருளை உளங்கொண்டு இப்பாடல்களைப் பாட அக்கொடியேறியதென்பர். நான்கேபாடல்களால் ஆய இச்சிறிய நூலில் நான்காவது பாடலில் திருவைந்தெழுத்தின் நுட்பங்களை விளக்கிக் கூறியுள்ளார். நெஞ்சு விடு தூது, குருமூர்த்தியை வழிபடும் முகமாகச் சாத்திரத்தைச் சொல்வது. இதல் 'தலைப்பட்டார் தீரத் துறந்தார்' என்ற திருக்குறளைக் கூறித் தெய்வப் புலமைத் திருவள்ளுவரைச் சிறப்பிக்கின்றார். இதில், மலை, நதி, நாடு, ஊர், மாலை, குதிரை, யானை, கொடி, முரசு, ஆணை ஆகிய தசாங்கங்கள் பேசப்படுகின்றன. நெஞ்சை முன்னிலைப்படுத்திக் கூறும் ஆசிரியர் நீ சென்றடையும் இடத்தைச் செப்பக்கேள் என அருளி, இன்ன இடங்கட்கு எல்லாம், செல்லாதே எனக்கூறும் இடம் மிகவும் சுவை பயப்பதாகும். பின் தம் ஆசிரியரிடத்துப் போற்றி செய்து வேண்டிக்கொள்ளும் விண்ணப்பமும் மிகவும் சுவை பயப்பதாகும். இலக்கிய நயமும் சித்தாந்த நுட்பமும் அமைந்து கிடக்கும் இப்பகுதிகள் மிகவும் நெடிது சிந்தித்தற்குரியன. திருவருள் கூட்டுவிக்கும் பொழுது பிறிதொரு முறை அவற்றைக் காண்போம்.

அதற்குத் திருவருள் முன்னிற்க என வேண்டி இவ்வரிய வாய்ப்பிற்கு நன்றி செலுத்தி அமைகின்றேன்.

"வாழி திருமன்றம் கண்ட மலர்க்கண்கள்
வாழி பெருமான் புகழ்கேட்ட வார்செவிகள்
வாழி அவனை வணங்கும் முடிச்சென்னி
வாழி அவன் சீர்பாடும் வாய்"

‡ உண்மை விளக்கம் – 36.

# சிவஞானசித்தியார் தெளிபொருள் விளக்கம்

தருமையாதீனப் புலவர், சித்தாந்தக் கலைமணி
திரு. சி. அருணைவடிவேல் முதலியார்

## பர பக்கம்

### தோற்றுவாய்

சந்தான குரவருள் முதல்வராகிய மெய்கண்டதேவ நாயனார் அருளிச்செய்த சிவஞான போத நூலை அடிநிலையாகக் கொண்டு சைவாகமப் பொருளை ஐயமற அடைவுபடுத்தி விளக்கி, விரித்தல் யாப்பால் நூல் செய்வான் புகுந்த ஆசிரியர் அருணந்தி தேவ நாயனார், அவ்வாறு எடுத்துக்கொண்ட நூல் இடையூறின்றி இனிது முற்றுதற் பொருட்டு முதற்கண் தாம் செய்துகொண்ட காப்பினைப் பின்னர் இந்நூலை ஓதுவார்க்கும் பயன்படும் பொருட்டு ஒரு செய்யுளால் கூறுகின்றார்.

யாதொரு செயலையும் இடையூறு நீக்கி முற்றுவிப்பவர் விநாயகர் ஆதலின், இங்கும் அவரே காப்பாகின்றார்.

### காப்பு

அறுசீரடி ஆசிரிய விருத்தம்

1. ஒருகோட்டன் இருசெவியன் மும்மதத்தன்
நால்வாய்ஐங் கரத்தன் ஆறு
தருகோட்டம் பிறைஇதழித் தாழ்சடையான்
தரும்ஒரு வாரணத்தின் தாள்கள்
உருகோட்டன் பொடும்வணங்கி ஒவாதே
இரவுபகல் உணர்வோர் சிந்தைத்
திருகோட்டும் ; அயன்திருமால் செல்வமும்ஒன்
றோஎன்னச் செய்யும் தேவே

### இதன் தெளிபொருள்

விநாயகர் சிவபெருமானால் அடியவர்க்கு யானைமுகம் உடைய ஒப்பற்ற பிள்ளையாராகத் தரப்பட்டவர்.

ஒரு கொம்பு, இரண்டு முறம்போலும் - அல்லது கவரி போலும் காதுகள், மூன்று மதங்கள், தொங்குகின்ற வாய், ஐந்து கைகள் ஆகிய சிறப்படையாளங்களை உடையவர்.

அவரது திருவடிகள், தம்மைக் கசிந்து உருகும் அன்போடு இரவும், பகலும் இடையறுது நினைப்பவரது அறிவின்கண் உள்ள கோட்டத்தை ஒட்டும். மேலும், 'அயன், அரி இவர்களது ஆட்சிச் செல்வந்தாமும் ஒரு பொருளோ' என வெறுத்து ஒதுக்கும்படி சிவமாம் தன்மையையே செய்யும்.

## விளக்கம்

'அத்தகைய அத்திருவடிகள் இந்நூலை இடையூறு நீக்கி இனிது முற்றுவிக்க வல்லன என்பது சொல்லவேண்டா; ஆதலின் அவைகளை யாமும் அவ்வாறு நினைந்து நிற்போம்' என்பது குறிப்பு.

"ஆறு............தாழ்சடையான் தரும்" என்னும் பகுதியை முதலில் வைத்துப் பொருள் கொள்ளவேண்டும். ஆறு - கங்கை. தருகோட்டு அம் பிறை - தானே தனக்குத் தந்துகொள்கின்ற கோட்டத்தால் (வளைவால்) அழகுபெற்று விளங்கும் பிறை. இதழி - கொன்றை. இது, முதலில் கொன்றைப் பூவையும், பின்னர் அதனுல் ஆகிய மாலையையும் குறித்தது. ஆகவே, இருமடியாகுபெயர். ஆறு பிறை இதழி, உம்மைத் தொகை. இஃது ஒரு சொற்போல நின்று சடை என்பதனோடு 'இவற்றை அணிந்த சடை' என இரண்டாம் வேற்றுமைத் தொகையாகப் புணர்ந்தது. இனி, "ஆறு பிறைச்சடை" 'இதழிச் சடை' என இரு தொடராக்கி, இதழிச் சடை - இதழிக் கொத்துப்போலும் சடை எனப் பின்னதை உவமத் தொகையாகவும் வைத்துப் பொருள் கொள்ளலாம். தாழ்சடை-தாழ்ந்த (நீண்டு தொங்குகின்ற) சடை; இது வினைத் தொகை.

'சிவன் தரும் வாரணம்' எனக் கூறிப் போகாது, 'ஆறு பிறைகளை யணிந்த சடையான் தரும் வாரணம்' என்றது, விநாயகர், 'உலகத்தை அழிப்பேன் எனப் போந்த கங்கையின் செருக்கை அடக்கிப் பிறையைத் தக்கனது சாபத்தால் அழிந்தொழியாது வாழ வைத்த பெருமான் மைந்தர் ஆதலின், அவர், தம்மை நினைவார்க்கு வரும் இடையூற்றைப் போக்கி இன்பம் உறச் செய்தல் உறுதி' என்பது விளங்குதற் பொருட்டாம். கொன்றை சிவபெருமானுக்கே உரிய அடையாள மாலையாதலின் அச்சிறப்புத் தோன்ற அதனையும் உடன் கூறினர். 'இதழி

போலும் சடை ' என வேறு தொடராக வைத்து உவமத் தொகையாகக் கொள்ளுமிடத்து, 'பொன்மை' என்னும் வண்ணத்தாலும், நீண்டு தொங்குதலாகிய வடிவத்தாலும் கொன்றைப் பூவினது கொத்துப்போல விளங்குகின்ற சடை - எனச் சடையினது அழகை வியந்து கூறியதாம்.

பிறகடவுளருக்கு இல்லாது விநாயகருக்கே உள்ள சிறப்படையாளங்களைக் கூறுதலே கருத்தாகலின், 'இருசெவி' என்றதற்கு மேற்கண்டவாறே பொருள் கொள்ளப்படும். அவ்விடத்து வருவித்து உரைக்கப்பட்டவை இசை யெச்சங்கள்.

'மும்மதம் யானைக்கே உளது. விநாயகர் வடிவம் முழுதும் யானையன்று; தலை மட்டுமே யானை வடிவம். ஆகவே, அவரை, மும்மதம் உடையவர் என்றல் எவ்வாறு பொருந்தும்' எனச் சிலர் தடை நிகழ்த்துவர். இதற்குப் பலர் பலவாறு விடை கூறுவர்.

'மும்மதம் யானைக்குரிய அடையே; விநாயகருக்கு அவ்வடை கொடுக்கப்படவில்லை' என்பது சிலர் கூறும் விடை.

'ஒருகோடு முதலிய பிற எல்லாம் விநாயகருக்கு உரிய அடையாய் இருக்க, இஃது ஒன்று மட்டும் யானைக்கு உரித்தென்றல் பொருந்தாது' என மேற்கூறிய விடையை மறுத்துச் சிலர் வேறு விடை கூறுவர். அது,

'இச்சை, ஞானம், கிரியை என விநாயகருக்கு உள்ள மூன்று சத்திகளே இங்கு மூன்று மதங்களாக உருவகம் செய்யப் பட்டன' என்பது.

'கோடு முதலியன உண்மையாய் இருக்க, இஃது ஒன்று மட்டும் உருவகமாதல் எவ்வாறு' என அதனையும் மறுத்து, 'பஞ்சாக்கரத்தின் வகைகளாகிய ஆறெழுத்து, எட்டெழுத்து, நாலெழுத்து முதலியனவும், பஞ்சாக்கரம் என்றே வழங்கப்படுதல் போல, யானையின் மும்மதத்தின் வகையாகிய ஒரு மதம், இரு மதம் என்பனவும் மும்மதம் என வழங்கப்படுகின்றன. இஃது இலக்கணை வழக்கு' எனச் சிலர் முடிவு கட்டுவர்.

யானையின் மும்மதங்கள், 'கன்ன மதம், கபோல மதம், பீச மதம்' என்பன. அவற்றுள் கன்னம், கபோலம் இரண்டும் தலையிலே யிருத்தலால், விநாயகருக்கு இருமதம் உள என்பது பற்றி ஐயம் எழ வேண்டுவதில்லை. இனிப் பீச மதம் ஆண் பகுதியினராகிய கடவுளர் அனைவருக்கும் உளதாகக் கொள்ளப்

படுதலால், விநாயகருக்கும் அவ்வாறே கொள்ள, ஏனைக் கடவுளர்க்கு ஒரு மதமே உரியதாக, மும்மதம் விநாயகருக்கே உரிய சிறப்பாகின்றது என்பதே உண்மைக் கருத்து என்க.

ஐங்கரம், தேவர்கட்கு இயல்பாய் உள்ள நான்கு கைகளோடு தும்பிக் கையும் சேர அமைவன. எனவே, இதுவும் விநாயகருக்கே உரிய சிறப்படையாளமாதல் அறிக. தும்பிக் கை தோளை உடையதன்று ஆதலால், "விநாயகருக்குத் தோள் நான்கு, கை ஐந்து" என வியப்பு உண்டாகக் கூறுவர். "தன்தோள் நான்கின் ஒன்று கைம் மிகூஉம் - களிறு"* என்பது ஒரு பழம் பாட்டு.

"ஒருகோட்டன்..........ஐங்கரத்தன் ஆறு" என்றது எண் அலங்காரம். இது, "விரோதவணி, முரண் தொடை" - என்பவற்றின் வகையேயாம். இதனுள் "நால் வாய், ஆறு" என்பவை பொருளால் இயையாது சொல்லளவில் மேற்கூறிய அணி தொடைகளோடு இயைந்து நிற்றலின், அணி வகையில் சிலேடையணியும், தொடை வகையில் சொல் முரண் தொடையுமாம்.

"விநாயகர்" என்னும் பெயர், "தமக்கு ஒரு நாயகரை (தலைவரை) இல்லாதவர்" எனப் பொருள் தரும் ஆதலின், அப் பொருள் தோன்ற "ஒரு வாரணம்" என்றார்.

வாரணம் - யானை. முகத்தால் யானைபோல்பவரை 'யானை' என்றே கூறியது உவமை யாகுபெயர். பிறவாறு ஆகு பெயராக்குதல் இடர் உடைத்து. என்னை? "வாரணம்" என்பது முன்னர் அதன் முகத்தையும், பின்னர் அம்முகம்போலும் முகத்தையும், அதன் பின்னர் அம்முகத்தையுடைய கடவுளையும் உணர்த்திற்று எனல் வேண்டும் ஆகலின்.

உருகு ஒட்டு அன்பு - உருகுதற்கும், ஓடுதற்கும் காரணமாய் உள்ள அன்பு. உருகுவதும், ஓடுவதுமாய் நிற்பது மனம் என்க. ஓடுதல் - ஒழுகுதல்.

"உருகு, திருகு" என்பன, "உருகல், திருகல்" எனப் பொருள் தருதலால், முதனிலைத் தொழிற் பெயர்கள். "ஓடு" என்பது, "ஒட்டு" எனத் திரிந்து நின்றமையால் முதனிலை திரிந்த தொழிற் பெயர்.

---

* தொல் - செய்யுளியல் - 51. இளம்பூரண உதாரணம்

"சிந்தை" என்பது அதன்கண் பொருந்தி நிற்கும் அறிவைக் குறித்தலால் தானி யாகுபெயர். அறிவின்கண் உள்ள கோட்டம் ஆணவ மலமாம்.

"ஒன்றோ" என்னும் ஓகாரம் எதிர் மறை.

"தேவே செய்யும்" என மாற்றி யுரைக்க. தே - தெய்வத் தன்மை. ஏகாரம், சிறப்பின்கண் வந்த பிரிநிலை.

இச் செய்யுள், காய் நான்கு, மா ஒன்று, தேமா ஒன்று என முறையே வரும் சீர்கள் ஆறு உடைய அடிகளால் ஆகிய ஆசிரிய விருத்தம்.

பாயிரம்

## கடவுள் வாழ்த்து

### தோற்றுவாய்

யாதொன்றன் தொடக்கமும் நன்முறையில் தொடங்குதல் அதன் நன்மைக்கு இன்றியமையாததாகும். அதனால் நூல்களை நன்முறையில் தொடங்குவதற்கு வாழ்த்துக் கூறித் தொடங்குவர். அவ்வாழ்த்துக்களுள் தலையாயது கடவுள் வாழ்த்து. அதனால், நூல்களின் தொடக்கத்தில் கடவுள் வாழ்த்துக் கூறுதல் மரபா யிற்று. அவ்வாறே இங்கும் ஆசிரியர் காப்புக் கூறிய பின் நூலைத் தொடங்குதற்கண் கடவுள் வாழ்த்து நான்கு செய்யுளாற் கூறுவாராய், முதற்கண் சிவ வணக்கம் கூறுகின்றார். இவ்வணக்கம் சிவபெருமானை அவனது அருள் வடிவில் சிறப்புடைய அம்பல வாணர் வடிவில் வைத்துக் கூறப்படுகின்றது.

### சிவ வணக்கம்

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

2. ஆதிநடு அந்தம்இலா அளவில் சோதி
அருள்ஞான மூர்த்தியாய் அகிலம் ஈன்ற
மாதினையும் ஒருபாகத் தடக்கி வானோர்
மகுடகூ ளாமணியாய் வையம் போற்றப்
பாதிமதி அணிபவளச் சடைகள் தாழப்
படரொளிஅம் பலத்தாடும் பரனார் பாதத்
தாதுமலி தாமரைகள் சிரத்தே வைத்துத்
தளராத பேரன்பு வளரா நிற்பாம்.

## இதன் தெளி பொருள்

அம்பலத்தில் ஆடும் பெருமானார் முதலும், நடுவும், முடிவும் இல்லாதவர்; எல்லையில்லாத பேரொளியை உடைய திருமேனியை உடையவர்; அத்திருமேனி அருள் வண்ணமான ஞானமேயாக நிற்பவர்; எல்லா உலகங்களையும் பெருது பெற்றவளாகிய சிவகாமி தேவியை ஒரு பாகத்தில் உடன் கொண்டிருப்பவர்; தேவர்களது முடிகட்கு முடி மணிபோல விளங்குபவர்; மேன்மக்களால் போற்றப்படுபவர்; பிறையை அணிந்துள்ள பவளம்போலும் சடைகள் நீண்டு சுழல ஆடுபவர். அவரது திருவடிகளாகிய தாமரை மலர்களைத் தலையில் பொருந்த வைத்துப்பணிந்து, அத்திருவடிக்கண் வைத்த அன்பு குறைதல் இன்றி மேன்மேல் வளரப் பேரன்பாகப் பெருக்குவோம்.

## விளக்கம்

"ஆதி நடு அந்தம்" என்றது கால வரையறையையும் "அளவு" என்றது இட வரையறையையுமாம். ஆகவே, 'ஆதி நடு அந்தம்' என்பன, 'பிறப்பு, வாழ்வு, இறப்பு' என்பவற்றைக் குறித்தன. 'சோதியை உடைய மூர்த்தி' என இயைக்க. உயிர்கள் மாயையில் கட்டுற்று நிற்றலால் பிறப்பு இறப்புக்களையும், ஊன் உடம்பையும் உடையனவாகும். 'இவற்றை இலன்' என்றதனால், 'மாயையில் கட்டுருதவன்' என்பதனைத் தோற்றுவித்து, அதனானே உயிர்க் குணங்களை உடையனுகாமை கூறியவாருயிற்று.

"அகிலம் ஈன்ற மாது" என்றதனால், இறைவன் தனது சத்தியின் வழியே உலகத்தைச் செயற்படுத்துதல் குறிக்கப்பட்டது. 'மாதொரு பாகன்' என்றதனால், ஒருவனேயாயினும், 'சிவம், சத்தி' என இருதன்மைப்பட்டு நிற்பன் என்பது புலப்படுத்தப்பட்டது. "வானோர் மகுட சூளாமணி" என்றதனால் தொழப்படுந் தேவரால் தொழப்படுகின்ற தேவதேவனுதல் சொல்லப்பட்டது, 'மேன்மக்களால் போற்றப்படுபவன்' எனவே, அவர்க்கன்றி அவனது பெருமை அறிய வாராமை பெறப்பட்டது.

"பாதிமதி..............சடைகள் தாழ" என்பது, நடனம் அழகிதாய்க் கண்ணையும், கருத்தையும் கவர்ந்து அன்பினை மிகுவித்தலில் நோக்குடைத்தாய் நின்றது. படர் ஒளி - எங்கும் பரவுகின்ற ஒளி. "படர் ஒளி அம்பலம்" என்றது, 'பொன்னம்பலம்' என்றவாறு.

'அம்பலம்' என்பது அருள் நிறைவு, இதனையே 'சிதாகாசம், சிதம்பரம்' என்பர். "அறிவாகிய வெளி" என்பது அவற்றின் பொருள். உலகில் நாம் அறிவது பூதாகாசம். அது சடம். அதனின் வேறுபடுத்துக் கூறுதற்கு, 'சிதாகாசம்' என்பர். சித் - அறிவு.

ஆகாயத்திற்கு, 'வியோமம்' என்றும் பெயர். பூதாகாசத்திற்கு அப்பாற்பட்டது சிதாகாசம் ஆதலின் அதனை, 'பர வியோமம்' என்றும், 'சிற்பர வியோமம்' என்றுங் கூறுதலும் வழக்காயிற்று. பரம் - மேன்மை. அறிவு சூக்குமப் பொருளாதலின் தமிழில் அதனை, 'சிறுமை' என வைத்து, 'சிற்றம்பலம்' என்பர். பேரம்பலம் உலகர் பொருட்டும், சிற்றம்பலம் அறிவர் (ஞானியர்) பொருட்டும் உள்ளன.

'இறைவன் ஆடுதல்' என்பது, அவன் படைத்தல் முதலிய ஐந்தொழில் செய்தலைக் குறிப்பதாம். அதனால் அவ்வாட்டம், 'பஞ்ச கிருத்திய தாண்டவம்' எனப்படும். ஒழிவின்றி எப்பொழுதும் செய்தலால் 'அனவரத தாண்டவம்' என்றும், ஆன்மாக்களுக்குப் பேரின்பத்தைத் தருதலால், 'ஆனந்தத் தாண்டவம்' என்றும் சொல்லப்படும். இவ்வாறான நடனத்தைச் செய்தலாலே இவ்வடிவம் ஏனை வடிவங்களினும் சிறப்பதாயிற்று.

தாது மலி - மகரந்தம் நிறைந்த; இது தாமரைக்கு அடை. தன்வினை, பிறவினை இரண்டற்கும் பொதுவாய "வளர்" என்னும் முதனிலை, இங்குப் பிறவினையாய் நின்றது. "வளரா நிற்பாம்" என்பது எதிர்காலத்தில் நிகழ்காலம். "வளர்த்து நிற்பாம்" என இரு மொழியாகக் கொள்ளினும் ஆம்.

"சிவம்" எனப்படும் பரம்பொருளே ஆன்மாக்கள் பொருட்டு மேற்கூறியவாறு நின்று ஆடல் புரிதலின், இது சிவத்தை வணங்கியதுமாயிற்று.

இச்செய்யுள் காய் இரண்டு, மா ஒன்று, தேமா ஒன்று என முறையே வரும் சீர்கள் பின்னும் அவ்வாறே இரட்டித்து வரும் எட்டுச் சீர்களை யுடைய அடிகளால் ஆகிய ஆசிரிய விருத்தம்.

இப்பாயிரம் முழுவதிலும் உள்ள செய்யுள் யாவும் இவ் வகையினவே.

இவற்றின் அடிகளில் மூன்றுஞ்சீர் ஏழாஞ் சீர்களும் சில இடங்களில் காய்ச் சீராய் மயங்கி நிற்றல் உண்டு (தொடரும்)

# நட்ட செடி, பட்டது ஏன்?

## புலவர், திரு. இரா. செல்வக்கணபதி

ஒருவன் நல்ல வளமான நிலத்தில் ஒரு செடி நட்டான்; தண்ணீர் ஊற்றினன்; எருவிட்டான்; வேலி கட்டினன். என்ன வியப்பு! செடி வளரவேயில்லை! ஒரு வாரத்தில் பட்டும்போய் விட்டது! நண்பனைப் பார்த்தபோது இதனைச் சொல்லி வருந்தினன்; வந்து பார்த்த நண்பனுக்குப் புரிந்துபோய்விட்டது; "முட்டாளே! செடி நட்டது உண்மைதான்! நீர் ஊற்றி எரு விட்டாய்; அறிகிறேன்! ஆனல் செடியைப்பார்; தலைகீழாக நட்டிருக்கிருயே! வேர் மேலேயல்லவா இருக்கிறது" என்று அவன் அறியாமையை விளக்கிப்போனன்.

வேரை மேலே வைத்துச் செடியை நட்டு அது வளரவில்லை என்று வருந்திய மனிதனைப்போல் பக்தித்துறையில் வருந்தும் அறிவில்லாதவர்களைப் பரிகசிக்கின்றூர் நமது குருமுதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்தர்.

தீர்த்தங்கள்தோறும் நீராடுகிறீர்கள்! உண்மைதான்; நாளும் மலர்கொண்டு அரனடி அர்ச்சிக்கின்றீர்! தெரிகிறது; ஊர் ஊராகச் சென்று திருக்கோயில்களை வழிபடுகிறீர்கள்! இல்லை என்று சொல்லவில்லை; இப்படி இருந்தும் இறையருள் கிடைக்கவில்லை என்றுதானே வருந்துகிறீர்கள்! காரணம் கூறுவேன்; கேளுங்கள்.

'மும்மலமும் அற்ற பெருமான் பண்பட்ட நிலமாக இருக்கிருன். அங்கே நீங்கள் அன்பென்ற வேர்ப் பகுதியை நட்டால் உயிர் என்ற செடியில் அருள் பழுக்கும். நீங்களோ ஆசை என்ற மேற்பகுதியை நட்டு, உயிர்ச் செடியைப் படவைத்துக் கொண்டு, பயனையும் இகழ்கிறீர்கள். எனவே அன்பென்ற அடிவேர் ஊன்றிப் பின்னர் மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையால் வழிபடுங்கள்! பயன்பழுக்கும் என்கிருர்'. எவ்வளவு எளிமை! இதோ! பாடல்:-

"நீரிலே மூழ்கிலும்என்? நித்தம்அருச் சிக்கிலும்என்?
பாரிலே சுற்றிப் பணியிலும்என்? — வேரிலே
உற்றிருந்தால் அன்றோ உயிர்க்(கு)உறுதி ஒன்(று)இரண்டும்
அற்றவனே சொக்கநா தா."
— ஸ்ரீ குருஞானசம்பந்தர்.

# சிவாகம ஸார ஸர்வஸ்வம்

சிவாகம வித்துவான், சிவாகமரத்னுகரம்
சிவஸ்ரீ. S. சுவாமிநாத சிவாசாரியார்

( மலர் 32. இதழ் 12. பக்கம் 676 இன் தொடர்ச்சி)

பிறகு சுற்றிலும் கிழக்கில் சந்திரனையும், தெற்கில் புதனையும், மேற்கில் குருவையும், வடக்கில் சுக்ரனையும், அக்னிதிக்கில் அங்காரகனையும், நைருதியில் சனியையும், வாயுவில் ராகுவையும் ஈசானத்தில் கேதுவையும் தியானித்துப் பூஜிக்க வேண்டும்.

இவர்களுக்கு நமஸ்கார முத்திரை காட்டி, சூரியனுக்கு சத்ராதி உபசாரம் செய்து ஜபஸமர்ப்பணம் செய்யவேண்டும். அதன்பிறகு தோத்திரம்செய்து தேஜஸ்சண்டசபூஜை முடித்து பராங்முகார்க்கியம் கொடுக்கவேண்டும்.

இவ்வாறு சூரியபூஜை செய்த பிறகு சிவபூஜையின் நிமித்தம் பாதப்ரக்ஷாளனம் செய்து விபூதி அணிந்து, சௌர பாவனையை விட்டு, சிவபூஜை செய்ய ஆரம்பிக்கவேண்டும்.

சாமான்யார்க்கியத்தினல் துவாரத்தைப் புரோக்ஷித்து அங்கு த்வாரத்தின்மேல் தேஹளியின் தென்புறத்தில் கணபதியையும் வட தேஹளியில் (வாயிற்படியின்மேல்) சரஸ்வதியையும் நடுவில் மஹாலக்ஷ்மியையும் பூஜிக்கவேண்டும்.

த்வாரத்தின் தென்புறமுள்ள சாகை என்ற ஸ்தானத்தில் நந்தியையும் அதற்கு வடக்கில் கங்கையையும், துவாரத்தின் வடக்கிலுள்ள சாகையில் மஹாகாளனையும் அதற்குத் தெற்கில் யமுனையையும் பூஜிக்கவேண்டும்

சர்வேப்யத்துவாரபாலேப்யஸ்வாஹா என்று அர்க்கியம் கொடுத்து அஞ்சலி செய்துகொண்டு, சர்வேப்யோ துவார பாலேப்யோநம: என்றுகூறி இந்த சிவபூஜையில் விக்னம் வராமல் ரக்ஷிக்கவேண்டும் என விக்ஞாபித்துக்கொள்ளவும்.

சிவாயநம வென்று நிரீக்ஷண முத்திரையால் ஆகாயத்தைப் பார்த்து அவ்விடமுள்ள விக்னங்களேயும், அஸ்திராயஹூம்பட் என்று நாராச முத்திரையினுல் புஷ்பத்தை மேலே எறிந்து சுவர்க்கத்திலுள்ள விக்னங்களேயும், ச்லீம் பாசுபதாஸ்த்ராய ஹூம்பட் என்று வலக் குதிகாலடியினுலே பூமியில் மூன்று தடவை தட்டி பூமியிலுள்ள விக்னங்களேயும் போக்கி மூன்று வித இடையூறுகளும் நீங்கினதாக எண்ணவேண்டும்.

பூஜாமண்டபத்தை சோடிகாமுத்திரையால் அஸ்த்திரரய ஹூம்பட் என்று திக்பந்தனமும் அவகுண்டனமும் செய்து நைருதியில் வாஸ்து அதிபதி பிரமனேயும் பூஜிக்கவேண்டும்

பிறகு ஆசாரியன், ஆன்மசுத்தி முதலிய பஞ்சசுத்திகளேச் செய்துகொண்டு இலிங்கபூஜையை ஆரம்பிக்கவேண்டும்.

வடக்குமுகமாக உட்கார்ந்துகொண்டு பூஜை செய்ய வேண்டும்.

नप्राच्यामग्रतः शंभोर्नोत्तरे योषिदाश्रये ।
नप्रदीच्यांयतः पृष्ठं तद्दक्षे देवमर्चयेत् ॥

சுவாமியின் எதிரிலும் தேவியிருக்குமிடமான வடபாகத்திலும், பின்புறமாதலால் மேல்பாகத்திலுமிருந்து பூஜிக்கக் கூடாது.

उत्तराभिमुखो भूत्वा रुचिरासन संस्थितः ।

வடக்குமுகமாக ருசிராஸனத்திலிருந்து பூஜிக்கவேண்டும்.

नविभोः पुरतः तिष्ठेत् नपश्चात्त्स्त्यन्तिकेऽपि च ।
अघौघ ध्वंसमोक्षार्थं दक्षे दक्षस्थितोऽर्चयेत् ॥
हिमं मरुच्च शीतंश्च पद्मं निर्दहते यथा ।
तथाघोरः प्रशान्तोपि पापनिर्दाहकारकः ॥
महानपि यथादन्ती यन्तारमनुवर्तते ।
तस्माद्दाप्तेन वचसा उत्तराभिमुखो यजेत् ॥

பாபங்களை நாசம் செய்வதன்பொருட்டு வலப்பாகத்திலிருந்துகொண்டு அர்ச்சிக்கவேண்டும். யானையானது பெரியதாகவிருந்தபோதிலும் பாகனை அனுசரிப்பதுபோல அவ்வாறு ஆப்த்தனுடைய வாக்கியத்தினல் உத்தராபிமுகனகவிருந்து பூஜையைச் செய்யவேண்டும்.

தர்ப்பை, பலகை, மான்தோல் முதலான ஏதாவதொரு ஆஸனத்தில் உட்கார்ந்துகொண்டு பூஜைசெய்யவேண்டும்.

आत्मसिद्धिप्रदानाच्च सर्वरोग निवारणात् ।
नवसिद्धिप्रदानाच्च आसनं कथितं प्रिये ॥

— कुलार्णवम्

தனக்கு சித்தியைக் கொடுப்பதாலும், சர்வரோகத்தையும் போக்குவதாலும் புதிய சித்திகளை அளிப்பதாலும் ஆஸனம் என்று பெயர். — குலார்ணவம்.

வெண்பட்டு, கம்பளி, மான்தோல். சிவப்புப்பட்டு, பலகை, பனைஓலைத்தடுக்கு. இந்த ஆஸனங்கள் தகுதியுள்ளவை.

24 அங்குல நீளம், 16 அங்குல அகலம், 4 அங்குல உயரமுள்ளதாக ஆஸனமிருக்கவேண்டும். கிருஷ்ணஜிநையினல் ஞானமுண்டாகும். புலித்தோலினல் மோக்ஷமுண்டாகும். மூங்கிலாசனத்தினல் தரித்திரம் உண்டாகும், கம்பளத்தினல் சாந்தி உண்டாகும். சித்ரகம்பளத்தினல் சர்வேஷ்டசித்தியுண்டாகும். கல்லாஸனத்தினல் வியாதி உண்டாகும். பூமியில் உட்கார்ந்தால் துக்கமுண்டாகும். உடைந்த ஆஸனத்தினல், தௌர்பாக்கியம் உண்டாகும். புல் ஆஸனத்தினல் பொருள் புகழ் போகும். துளிர் ஆஸனத்தினல், மனக்கலக்கம் உண்டாகும். வஸ்திராஸனம், சுகமளிக்கும். இவ்வாறு ஏதாவது ஒரு ஆஸனத்தில் அமர்ந்துகொண்டு பூஜைசெய்யவேண்டும்.

योवेत्ति पञ्चशुद्धिं तु स पूजां कर्तुमर्हति ।

— वातुलम्

பஞ்சசுத்தியை அறிந்தவனே பூஜைசெய்யத் தகுதியுள்ளவன் என்று வாதுளம் கூறுவதாலும்,

" शिवीभूय शिवं यजेत "

சிவனாக ஆகி, சிவனைப் பூஜிக்கவேண்டும் என்று ஆகமசுருதி கூறுவதாலும் பூஜைக்குமுன் பஞ்சசுத்திகளைச் செய்து கொண்டு சிவோஹம் பாவனையால் சிவனைப் பூஜிக்கவேண்டும்.

स्वंदेहं भूतबीजं हरिविधि रचितं स्वाङ्कुर मर्मसूलं
भव्यं कालादि सारं विषयदळगतं खादि शाखोपशाखम् ॥
भावा शेषे प्रसूनं व्यवसित सुफलं पुं विहङ्गोप भोग्यं

न्यग्रोधं चोर्ध्वमूलं विषयरसमवाक् शाखिनं भावयेच्च ॥
कुम्भापूरक रेचकार्घ युगळै ह्लामादि मंत्रान्पठन्
भूम्यादिस्थ गुणस्थितिक्रमयुतं पत्राद्ययोगान्वितम् ।
शोषाद्दाहनतश्च भस्म विगमात् शुद्धाभ्रसंभावनात्
शक्त्याप्लावित मंत्रविग्रहयुतः पूजांविदध्यद्त्रदि ॥

— सिद्धांतसारावळि

பூத சுத்தி :-


சரீரத்தை ஒரு ஆலமர வடிவமாக நினைக்கவேண்டும். உலகத்தில் காணப்படும் ஆலமரத்திற்கு மாறுபட்டதாய் விலக்ஷணமாயிருப்பதான ஆலமரம் இது. இந்தஆலமரத்திற்கு வேர் மேலேயும் கிளைகள் கீழிலும் இருக்கும். வடதரு, மேலிருக்கும் மாயை வேர். கீழிருக்கும் தத்துவங் கிளையென்றுணர்க. பிருதிவி முதலிய பூதங்கள் விதையாகும். ஸ்தூல சரீரம் சூக்ஷ்ம சரீரம் பீஜசரீரமாகும் என்று அறிக.

ஸ்ருஷ்டிகர்த்தாவான பிருமனாலும் ஸ்திதிகர்த்தாவான விஷ்ணுவாலும் உண்டுபண்ணப்பட்ட முளையை உடையது.

" ஸ்வாங்குரம் " தன்னையே முளையாகவெண்ணுமிடத்தில் தான் தேஹமென்று அறிக. வித்திலிருந்து முளை புறப்படுவது போல பூதங்களிலிருந்து சரீரமுண்டாயிற்று என்று அறிக. இந்த சரீரவிருக்ஷத்திற்கு மாயை நிலை வேர் புண்ணிய பாப கருமம் பக்கவேரென்றறிக.

( தொடரும் )

தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்



இருபத்தா றரையாண்டு இவ்விதனமு வளர்த்திட்ட
குருகயிலைச் சுப்ரமண்ய குரவரது அருளுருவம்.

# குறியீடு

## நீதிபதி, கனம். எஸ். மகராஜன் பி. ஏ., பி. எல்.,

உடைந்துபோன பென்ஸில் குச்சியொன்று; உப்புப் பெறாதது; தரையில் கிடந்தால், குப்பையோடு குப்பையாகப் பெருக்கித் தள்ளிவிடுவார்கள். ஆனால், அதைப் பத்திரமாக ஒரு வெள்ளிப் பேழையில் வைத்து நான் பாதுகாத்து வருகிறேன். பேழையைத் திறந்து குச்சியைப் பார்க்கும்போதெல்லாம் எனக்கு மயிர்க்கூச்சல் எடுக்கிறது; அன்பு குமுறிக்கொண்டு வருகிறது. குச்சியைப் பார்த்தவுடன் பல ஆண்டுகளுக்கு முன் அமரனான என் நண்பனுடைய உருவம் என் மனத்தகத்தே பளிச்சென்று காட்சி கொடுக்கிறது. அந்த நண்பன் பரிசாகக் கொடுத்த குச்சி அது. மற்றவர்களுக்கு அது வெறுங்குச்சிதான். ஆனால், என் நெஞ்சத்திலே அந்தக் குச்சி செய்கிற மாய ஜாலங்களே தனி; குச்சியைக் கண்டவுடன் அந்த நண்பனையே கண்ட உணர்ச்சி எனக்கு ஏற்படுகிறது. நட்பு வளத்திலே, இங்கிதத்திலே, எல்லையற்ற பரிவிலே, பண்பாட்டிலே, சகிப்புத் தன்மையிலே, ஆர்வத்திலே அப்படியொரு நண்பன் எனக்குக் கிடைத்ததில்லை. அவன் மாய்ந்துவிட்டால்தான் என்ன? அவன் கொடுத்த பென்ஸில் குச்சி இருக்கிறது: போதும். அவனுடைய புன்முறுவலை அந்தக் குச்சி எனக்குக் காட்டிக் கொண்டிருக்கிறது. அவனுடைய வாழி நண்பினை அது எனக்கு உணர்த்திக்கொண்டே இருக்கிறது. என்னுடைய இதயத்திலே இப்படியொரு பிணைப்பு; பிரிக்க முடியாத பிணைப்பு ஏற்பட்டுவிட்டது. குச்சியைக் கண்டதும் அந்த நண்பனைப் பற்றிய நினைவு; அந்த நண்பனை நினைத்ததும், குச்சியைப் பற்றிய நினைவு. இந்த இணைப்பு நெருங்க நெருங்க, வெறும் நினைவுக் குறியாக இருந்த குச்சி, நண்பனாகவே மாறிவிடுகிறது. எது குறி, எது மூலப்பொருள் என்ற பேதம் மறைந்து விடுகிறது. இந்த மனநிலைதான் உருவ வழிபாட்டுக்கு அடிப்படையாக இருக்கும் நிலை.

எல்லையற்ற பரம்பொருளுக்கு நாம் ஒரு அழகிய உருவத்தைக் கற்பிக்கிறோம். உருவத்தைப் பார்க்கும் பொழுதெல்லாம், அந்தக் கருணைக் கடலின் நினைவு வருகிறது. இறைத்தத்து

வத்தைப் பற்றிச் சிந்திக்கும் பொழுதெல்லாம், நாம் கற்பனையால் செய்த உருவத்தின் நினைவு வருகிறது. இவ்வாறு, நம் மனம் குறியோடும் குறிக்குப் பொருளாக இருக்கும் தத்துவத்தோடும் பழகப் பழக, இரண்டுக்கும் இடையேயிருக்கும் பிணைப்பு வலுக்கிறது; வேறுபாடு மறைகிறது அந்தக் குச்சியே என் நண்பனுக்குச் சமானமாயிற்றே, அதைப் போல.

அழகர் கோயிலிலிருக்கும் திருமாலின் ஒளிமிக்க சிலையைப் பார்த்துப் பார்த்துப் பழகியவர் நம்மாழ்வார். சிலையா அது? இல்லை. இறைவனே அர்ச்சாவதாரம் எடுத்து அந்தக் கோயிலில் குடிகொண்டிருக்கிறான் என்பதை உணர்கிறார் ஆழ்வார். பெருமானின் பைம்பொன் திருமேனிக்குப் பட்டுப் பீதாம்பரத்தை உடுத்துகிறார். பல பொற்கலன்களைப் பூட்டுகிறார். தங்கத் தாமரையிலே நிற்கும் சோதித் திருவடிகளைப் பார்க்கிறார். முகத்திலுள்ள சோதி, பொன் முடியின் சோதியிலே கலப்பதைக் கண்டு பரவசமடைகிறார்; ஆடிப்பாடுகிறார். ஏன் செய்ய மாட்டார்? நண்பனைக் காட்டிய அந்தப் பென்ஸில் குச்சியை மதித்து அதற்கு வெள்ளிப் பேழை கொடுத்தேனே; இறைவனைக் காட்டும் அந்தத் திருமேனிக்கு என்றுமழியாத ஒரு தமிழ்ப் பாடலைப் பாடிக் கொடுத்தார் நம் ஆழ்வார். "முடிச்சோதியாய் உனது முகச் சோதி மலர்ந்ததுவோ?" "தங்கக்கிரீடம் வைத்திருக்கிறாயே, அது எப்படி டால் அடிக்கிறது! ஆனால், அந்த முடியின் ஒளியெல்லாம் தன்னைத்தானே படைத்துக்கொண்ட ஒளியா! இல்லை, இல்லை. உன் முகச்சோதியிலிருந்து மலர்ந்ததுதான் அந்த ஒளியெல்லாம்.

"முடிச்சோதியாய் உனது முகச் சோதி மலர்ந்ததுவோ?"

பொற்றாமரை மேல் நிற்கும் திருவடிகளைப் பார்க்கிறார் ஆழ்வார் அடடா, பொற்றாமரைக்கு இவ்வளவு அழகா! "உன் திருவடியிலிருந்து வெளிப்பட்ட சோதிதான் அந்தத் தாமரையாக மலர்ந்துவிட்டதா!"

"அடிச்சோதி நீநின்ற தாமரையாய் அலர்ந்ததுவோ?"

என்று அதிசயிக்கிறார்.

"உடம்பை ஒட்டிக்கொண்டு ஒளி வீசி நிற்கிற அந்தப் பட்டுப் பீதாம்பரத்தோடும், நீ அணிந்திருக்கிற பல்வகைப் பட்ட தங்க நகைகளோடும், உன் பைம்பொன் இடுப்பிலேயுள்ள சோதி கலந்துவிட்டதா? இந்த அற்புதத்தையெல்லாம் நானறிய நீ கட்டுரைக்க வேண்டும், அப்பனே!" என்று கேட்கிறார்.

" படிச்சோதி ஆடையொடும் பல்கலனும் நின்பைம்பொன்
கடிச்சோதி கலந்ததுவோ, திருமாலே, கட்டுரையே ! "

உலக இலக்கியத்திலேயே இப்படி ஒரு பாடல் கிடையாது என்று தமிழர்கள் தோள் தட்டலாம். ஆனால், தோள் தட்டுவதற்கு முன், இப்படியும் ஒரு பக்திப் பாடல் தமிழில் இருக்கிறது என்று அறிந்துகொள்வது நல்லது.

பாட்டைத் திரும்பவும் ஒரு முறை படித்துப் பார்ப்போமா

" முடிச்சோதியாய் உனது முகச்சோதி மலர்ந்ததுவோ
அடிச்சோதி நீநின்ற தாமரையாய் அலர்ந்ததுவோ
படிச்சோதி ஆடையொடும் பல்கலனும் நின்பைம்பொன்
கடிச்சோதி கலந்ததுவோ, திருமாலே, கட்டுரையே ! "

---

## பார்வையாளர் குறிப்பு நகல்

தருமையாதீனம்

### ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானம், திருவையாறு.

நேரிசை வெண்பா

சீராரும் ஐயாற்றுச் செம்பொன்னார் மேனியனைப்
பாரில்யான் பார்க்கின்ற பாக்கியத்தை – நேரவைத்தார்
இக்கோயில் நற்பணிசெய் இன்முகஇ ரத்தினமும்
தக்க சரவணனும் சார்ந்து. (1)

ஐயாற் றரசே அடியேன்பா ஏற்குமுரு
கையா விழுங்கும் கனியேசொல் – பைக்கருவால்
வந்தவினை தீர வரமருளும் கற்பகமே
கந்தனின் தந்தாய் கனிந்து. (2)

குயிலின் மொழிஎடுத்துக் கூவுந் திறமாய்ப்
பயிலும் அறிவும் பதமாம் – இயல்பெற்ற
ஓதுவார் இங்குண்(டு) உரைக்கலோர் பின்னமில்லை
தீதறு தென் இறையூர் தேர். (3)

செந்தமிழில் நற்பாத் தினம்புனையும் சிற்றடியேன்
இந்நாளில் கோயிற் கினிதுவரல் – இந்தப்
பிறவியில் பெற்ற பெரும்பயனென்றே
அறிந்துரைத்தேன் ஆசு கவி. (4)

(ஒ-ம்) கி. க. பாண்டியன்,
கோட்டாட்சித் தலைவர், தஞ்சை.

# குருஞானசம்பந்தர் போற்றிய தத்துவப்பிரகாசம்

டாக்டர். திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ., பிஎச். டி.

## ஞானவரண விளக்கத்தில் :

தருமையாதீனம் முதற் பெருங்குரவர் ஆகிய குருஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தம்முடைய ஞானவரண விளக்கத்தில், தத்துவப் பிரகாசப் பாடல் ஒன்றைச் சேர்த்துள்ளார்கள். இது "யோகத்தில் யோகம்" என்ற பொருள்பற்றிய தத்துவப் பிரகாசத்தின் 161 ஆவது பாடல் ஆகும் என்பர் அறிஞர். (தத்துவப்பிரகாசம் மு. அருணசலம் பதிப்பு - 1965 பக் 48 பார்க்க).

"யோகத்தில் யோகம் நிராதாரமே அதுதான்
உயர்புலனைக் கவர்பொறிகள் யாவையும் உள்ளடக்கி
மோகத்து வளிக்கேற்றங் கொருவிகற்ப மற்று
முச்சதுரம் ஆதாரம் அடைவே நீக்கி
மாகத்தின் மதிக்கலையின் அமுதம் தேக்கி
வளருமகாரத்தொனியின் நடத்தை மன்னி
ஏகத்தனய் அதனின் செயல் தானகி
இரண்டற்றுத் தூங்குவதென் றிசைக்கும் நூலே"

இதற்கமைந்த உரை விளக்கம் பின் வருமாறு அமையும்: "யோகத்தில் யோகமாவது நிராதார யோகமாம். அந்த நிராதார யோகந்தான் மிகுந்த ஞானேந்திரியங்களும், கன்மேந்திரியங்களும் உள்ளே அடங்க ஒடுங்கியிருந்து, மூர்ச்சிக்கும் பிராண வாயு முதல் பத்து வாயுவும் இயங்காமல் பிராண வாயுவையும் கபாலத்திலே அடக்கிச் சற்று நேரம் மனத்தை விகற்பியாது, ஆருதாரத்திலும் மூன்று மண்டலத்திலும் அசபாமந்திரத்தைக் கீழ்மேலாக உச்சரித்து வாயுவை ஏற்றி மேலேசென்று ஆகாயத்தின் சந்திர கலையிலே அக்கினியோடே உறைத்ததனலே உருகி விழும் அமுதைக் கொண்டு உடலம் எங்கும் நிறைத்து, மிக்கு வரும் அகாராக் கிரத்தினலே திருக்கூத்தைத் தியானித்து, அந்தத் திருக் கூத்தினேடு ஒன்றியவனகி, அந்தத் திருக்கூத்தின் வழியே தியானம் என்றும், தகனம் என்றும் இரண்டுபடாமல் இருந்து, தூங்குவதே யோகத்தில் யோகமாம்" என்பதாகும்.

திருக்களிற்றுப் படியாரும் யோகத்தின் இவ்விருவகை நிலைகளைப் பின்வருமாறு பேசும்.

" ஆதாரயோகம் நிராதார யோகம் என
மீதானத்து எய்தும் விதியிரண்டே " (22)

சிவஞானசித்தியாரில் நிராதார யோகம் பற்றிக் கூறும் பின் வரும் திருவிருத்தத்தை ஒட்டியே, இத்தத்துவப் பிரகாசப்பாடல் எழுந்துள்ளது :-

" சகமார்க்கம் புலனொடுக்கித் தடுத்துவளி யிரண்டும்
சலிப்பற்று முச்சதுர முதலா தாரங்கள்
அகமார்க்கம் அறிந்தவற்றின் அரும்பொருள்கள்
[உணர்ந்தங்கு
அணைந்துபோய் மேலேறி யலர்மதி மண்டலத்தின்
முகமார்க்க அமுதுடலம் முட்டத் தேக்கி
முழுச்சோதி நினைந்திருத்தல் முதலாக வினைகள்
உகமார்க்க அட்டாங்க யோகமுற்றும்
உழத்தல் உழந்தவர் சிவன்தன் உருவத்தைப்
[பெறுவர் " (372)

## மாபாடியத்திலும் :

தருமையாதீன முதற் பெருங்குரவர் " பார்விரித்த நூலெல்லாம் பார்த்தறியிற் சித்தியிலே ஓர் விருத்தப் பாதி போதும் " என்று சிவஞான சித்தியாரைப் பாராட்டிய தம் திருவாயால் இந் நூலிலிருந்தும் ஒரு திருப்பாடலை எடுத்து ஓதி மேற்கோளாக ஆண்டுள்ளனர் என்பது தத்துவப் பிரகாசத்திற்கு மேலும் பெருமை கூட்டும் ஒரு செய்தி ஆகும். குருஞானசம்பந்தர் எடுத்தாண்ட இந்நூலிலிருந்தே 5, 6 பாடல்களை வெள்ளியம்பலவாணத் தம்பிரான் சுவாமிகள் ஞானாவரண விளக்க உரைப் பகுதியில் எடுத்தாண்டுள்ளனர் என்பர் அறிஞர். (மேற்படி நூல் பதிப்பு - பக். 50 பார்க்க)

## பெயர்க்காரணம் யாது ?

இந்நூலின் பெயர்க்காரணத்தை இதன் உரையாசிரியர், சித்தியார் சுபக்கச் செய்யுள் (191 ஆம்) பகுதியைக் காட்டித் " தத்துவங்கட்கும், ஆன்மாவுக்கும், சிவனுக்கும் தத்துவம் என்று பெயராதலால் தத்துவப்பிரகாசம் என்று பெயராயிற்று " என்று விளக்குகின்றார்.

" சொற்பொருளால் தத்துவப் பிரகாசம் எனச் சொன்னேன்
சொல்லிரவி ஒளியை மின் மினிதொடரும் நெறியே " (8)

என்ற வரிகட்கமைந்த உரைப்பகுதி இங்கு நோக்கத்தக்கதாக உள்ளது.

**எடுத்தாண்டமைக்குரிய காரணங்கள் :-**

குருஞானசம்பந்தசுவாமிகள் தத்துவப் பிரகாசத்தைப் போற்றி எடுத்தாண்டமைக்குரிய காரணங்கள் பலவாக இருக்கக் கூடும். அவற்றுள் இனிது புலனுவது ஒன்று ஆகும்; அதுதான் தத்துவப்பிரகாசம்; முதன் முதலாகப் "பிராசாத யோகம்" பற்றி விளக்கும் ஒன்றுகும். (பிராசாதம் – சிவஞானமாகிய கதியைத் தருவது) வடமொழியில் உள்ள பிராசாத ஷட்சுலோகியைத் தமிழில் "சோடசகலாப் பிராசாத ஷட்கம்" என்று மொழி பெயர்த்த அருட்புலமை உடைய குருஞானசம்பந்த சுவாமிகள் பிராசாத யோகம் பற்றி விளக்கும் இந்நூலில் தம் திருவுள்ளத் தைச் செலுத்தியமை இயல்பே ஆகும்.

தத்துவப்பிரகாசம் தன்னுடைய 147 ஆவது பாடலில் பிராசாத யோகவகை பற்றிப் பேசுகின்றது :

" ஓங்கு கிரியையில் யோகம் தத்துவங்கள் எல்லாம்
உற்பவித்த அடைவிலே ஓடுங்குவதாக் கண்டு
தாங்கரிய உயிர்சிவன்றன் அருகில் சென்று
சார்வதெனத் தியானித்தல் அதுவும் அன்றி
நீங்கரிய பிராசாதம் பதினறு ஆகும் "

இனி, சமயதத்துவ வளர்ச்சி முறையினைக் காட்டும் நூலாக இது இருப்பது பல எடுத்துக்காட்டுக்களால் விளங்குவதாகும். சத்திநிபாதத்தைச் சகலர், விஞ்ஞான கலர், பிரளயாகலர் என்ற வகையினர்க்குப் பதினறு வகையாக்கிக் காட்டுவதும், (முன்னர் மந்தம், மந்ததரம், தீவிரம், தீவிரதரம் என்ற நான்கு மட்டுமே கூறப்பட்டன) தச காரியத்தைத் தசக்கிரமம் ஆக்கி உரைப்பதும், முதலியனவற்றைக் காட்டலாம். அருளாளர் கூறிய அநுபூதி நெறியை மேலும் நுட்பமாகச் சிந்திக்கும் வளர்ச்சி முறை நம் நாட்டில் கி. பி. 14 ஆம் நூற்றுண்டில் இருந்து வந்தமையை இப்பகுதிகள் எடுத்துக் காட்டுவன என்று கூறலாம்.

சைவக் கிரியைகள் பற்றித் தமிழில் அறிந்து கொள்ள ஒரு மூல நூலாகத் தத்துவப்பிரகாசம் விளங்குகின்றது. சூரிய பூசை, சிவபூசை, அக்கினி காரியம், தீட்சைகள், சமயதீட்சை (மண்டபம், குண்டம், முதலியன) அபிடேகவிதி, கிரியா அந்தியேட்டி என்பன வடமொழி பத்ததிகளில் அறிந்து கொள்ளத்

தகுவனவற்றை எளிமையாகத் தமிழ் மக்கள் அறிந்து கொள்ள இந்நூற் பாடல்கள் துணை புரிவனவாம். (பார்க்க : கிரியை 71-145 பாடல்கள்)

வேறு தமிழ் நூல்களிற் காணக்கிடைக்காத, இந்நூலொன்றில் மட்டுமே காணக்கூடிய செய்திகளில், 'பிராணுயாமம்' பற்றியும், 'ஆசனம்' பற்றியும் கூறப்பட்டுள்ளவற்றைச் சிறப்பாகக் குறிக்கலாம்.

யோகாசனங்கள் பற்றி 124, 125 ஆம் பாடல்களில் தத்துவப் பிரகாசர் பாடுகின்றூர்; நூற்றெட்டு ஆசன பேதங்கள் இவ்விடத்துக் காணப்பெறுகின்றன. உரையாசிரியர் இவற்றை இனிது விளக்கியுள்ளார். (75 வகைகள் பிராணுயாமத்திற் கூறப்பட்டுள்ளன; 108 பேதம் என்று குறிக்கின்றூர்; இப்பகுதிகள் யோகத்தில் கிரியை என்று சுட்டப்பெறுகின்றன.) இவ்வாறு பல்வேறு சிறப்பியல்புகளைக் கூறலாம்.

குருஞானசம்பந்த சுவாமிகள் போற்றிய இத்தத்துவப் பிரகாசம் இவ்வாறு சைவ சித்தாந்த சமய தத்துவ வரலாற்றில் ஒரு சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றது. சரியை, கிரியை, யோகம் எனும் மூன்று பகுதிகளையும் விரித்துரைக்கும் தமிழ் மூலநூலாக இது விளங்குகின்றது. 1965 ஆம் ஆண்டில் திரு. மு. அருணசலம் அவர்கள் வெளியிட்டுள்ள இந்நூற்பதிப்பு, நூல் கிடைக்கப் பெருத குறையைப் போக்குவதோடு ஆய்வுக்குப் பெருந்துணையாகவும் உள்ளது என்பது மிகையாகாது.

---

## EXTRACT FROM THE VISITOR'S BOOK

Dharmapuram Adhinam

Sri Panchanatheeswaraswamy Devasthanam, Thiruvaiyaru.

I had the privilege of having the Dharshan of Panchanatheeswarar and the Ambal. It was a great experience for me. The Superintendent of the Devasthanam was good enough to accompany me and explain the various aspects of the temple history and activities. This is a very well maintained temple. My thanks to the authorities for their courtesies and kindness.

(Sd.) Ck. A. Varadhan,
Dy. Sec., Deptt. of Agriculture,
Govt. of Gujarat, Gandhinagar.

27—9—73.

# ஜனன மரண இயல் — — பிறப்பும் இறப்பும்

தருமையாதீனப்புலவர், மகாவித்துவான்
திரு. ச. தண்டபாணி தேசிகர்

பெருந்தவ முனியாகிய அகத்தியனே! புண்ணியப் பயனால் சொர்க்கம் அடைகிறவர்கள் தேவசரீரம் எடுக்கும் முறையையும் பாவிகள் நரகத்தில் அழுந்துவதற்காக யாதனா சரீரம் எடுக்கும் முறைமையினையும் இரண்டையும் உடையவர்கள் அதற்கு ஈடாக பூமியில் மக்களாகவும் விலங்குகளாகவும் பறவை ஊர்வன நீர்வாழ்வன தாவரங்கள் இவைகளாகவும் உடல் கொள்ளும் முறைமையினையும் வகுத்துச் சொல்கிறேன். நீ! கவனமாகக் கேட்பாயாக என முருகப்பெருமான் சொல்லத் தொடங்குகிறார்.

பாவிகளுக்கு நரகத்தில் அழுந்த யாதனா சரீரம் பாவத்தின் மிகுதியாலே பஞ்ச பூதத்தில் இருந்து ஒரு கணத்தில் உண்டாகும். அங்ஙனமே சொர்க்கம் அடைபவர்களுக்கும் புண்ணியப் பயனால் பூத சாரசரீரத்தில்இருந்து தேவசரீரம் ஒருகணப்பொழுதில் உண்டாகும். இருவினையினாலே பூமியின்கண் மனிதர் தேவர் முதலிய அனைவருக்கும் தேகம் உண்டாம்.

பூமியில்பிறக்கும் உயிர்களுக்குக்கிடைக்கும் உடல்வகைகள்:- சராயுசம், அண்டசம், சுவேதசம், உத்பிசம், என நால்வகையினவாம். அவற்றுள் சராயுசமாவன கருப்பையிலிருந்து பிறக்கும் மக்களும் விலங்குகளும் ஆம்.

அண்டசம் ஆவன முட்டையிலிருந்து பிறக்கும் ஆமை, பாம்பு, பல்லி முதலான ஊர்வனவும், நீர்வாழ்வனவுமாம்.

சுவேதசம் என்பன வியர்வையிலிருந்து பிறப்பனவாகிய புழு, பூச்சி, எறும்பு முதலியனவாம்.

உத்பிசங்களாவன கிழங்கு, விதை, கிளை இவைகள் மண்ணோடும் தண்ணீரோடும் காற்றோடும் பொருந்த வெயில் காற்று இவைகளின் உதவியால் மேல்நோக்கி வளர்வனவாம். மனித

னுக்கு உணவாகும் யவை முதல் செந்நெல் ஈறுன பதினேழு வகை நெல்லினையும் குத்தி, அரிசியாக்கி, சமைத்து, உண்ண அவைகள் பசிநோய்க்கு மருந்தாகும். இவற்றுள், கேழ்வரகு, சாமை, கம்பு, தினை முதலான தானியங்கள் அத்துணைச் சிறந்தன அல்ல. நெல் அரிசியும் மாவும் தண்ணீருடன் கலந்து நெருப்பில் வேக அவை அன்னமாகவும் பலகாரமாகவும் ஆகின்றன. அவைகளை மானிடர் உண்டு, நீரையும் குடிக்க, அவை அசனுசனமாகிய குடலைப் பொருந்திப் பக்குவாசயத்தில் சிறு குடலில் இறங்கும். இந்தப் பக்குவாசயம் கொப்பூழுக்கு மேல் இருப்பது; உண்ட உணவையும் நீரையும் பிராணவாயு இரண்டாகப் பிரித்து உணவை மேலும் நீரைக் கீழுமாகச் செய்யும். அந்தநீர் கொப்பூழில் ஒரு நெல் அளவு உள்ள அக்கினியால் நன்றாக வெந்து குருதியாகவும் மலமாகவும் மாறும். யானை குதிரை ஒட்டகம் முதலானவற்றிற்குக் கட்டைவிரல்அளவும் பசுக்களுக்கும் நாய் முதலிய மேல்நோக்கிய வாலை உடைய விலங்குகளுக்கும் ஒரு நெல் அளவும், காக்கை, கோட்டான், கொக்கு முதலியவைகளுக்கு ஒரு எள் அளவும், புழு பூச்சிகளுக்கு ஒரு நெல்லின் வால் அளவும் உதர அக்கினி இருக்கும். மலம், கண்ணில் பீழையாயும், செவியில் குரும்பியாயும் மூக்கில் அழுக்காயும், நா, பல், உடல் இவற்றில் அழுக்காயும், மலசலமாயும் வெளிப்படும்.

உணவு பிரியும் வகை :- நாம் உண்ட உணவின் சாரம், சமானன் என்னும் வாயுவோடு கூடி உடலிலுள்ள எழுபத்து இரண்டாயிரம் நாடிகளின் வழியாக உடல் எங்கும் பரவும். மேலும் பிராண வாயுவினுலே உடலில் வெப்பத்தை விளைவிக்கும். இப்படி அன்னசாரம் பிரிய அதனுல் தோலும் தோலில் இரத்தமும், இரத்தத்தில் இறைச்சியும், இறைச்சியில் நரம்பும் மயிரும் நரம்பிலிருந்து நாடிகளும் நாடிகளில் இருந்து எலும்பும் உண்டாகும். எலும்பில் இருந்து தசையும் நரம்பும் உண்டாகும். குருதி சுக்கிலமாக மாறும். அது கருவில் இருந்து கற்பமாகும். இங்ஙனம் அன்னசாரம் பன்னிரண்டு வகைப்பட்டு மேலும் உடல் உண்டாகக் காரணமாகிறது.

கருப்பையில் சுக்கிலம் அதிகமானுல் ஆண் பிறக்கும். சுரோணிதம் அதிகமானுல் பெண் பிறக்கும். இரண்டும் சமமானுல் அலி பிறக்கும். கலப்புக் காலத்து பிராணவாயு வந்து மோதினுல் இரட்டைக் குழந்தை பிறக்கும். புணர்ச்சிக் காலத்து தலைவனும் தலைவியும் என்ன குணமாய் இருந்தார்களோ அந்தக் குணமே குழந்தைக்கும் இருக்கும்.

அன்னசாரம் சுக்கிலமாய் உயிரோடு தாயின் வயிற்றை அடைந்து கருப்பையில் தங்கி முறையாக உறுப்புக்கள் உண்டாகி ஒரு வடிவமாகி பூமியில் பிறந்து வளர்ந்து இறக்கும். கருவில் புகுந்த சுக்கில சுரோணிதங்கள் இரண்டு நுண் துகள்களாய் ஒரு நாழிகை கழித்து ஒரு பேன் அளவு வடிவாயும், ஒரு நாளில் ஒரு குன்றிமணி அளவாயும், ஐந்து நாளில் நீர்க்குமிழியாயும், ஏழாம் நாள் இள ஊனும், பதினன்காம் நாள் ஊன் பிண்டமாயும் குருதியோடு கலந்திருக்கும். இருபத்து ஐந்தாம் நாளில் வித்துண்டாகும். ஒரு மாதத்தில் முதுகு திரண்டு முதுகெலும்பு உண்டாவதோடு கழுத்தும் தலையும் தோன்றும். இரண்டாம் மாதத்தில் கை, கால், இடுப்பு, விலா இவைகள் தோன்றும். மூன்றும் மாதத்தில் வடிவில் மூட்டுக்கள் உண்டாகும். நான்காம் மாதத்தில் விரலும் நகங்களும் முளைக்கும். ஐந்தாம் மாதத்தில் முகம், மூக்கு, கை, கன்னம், மலவாசல், மலவாயு, எயிறு இவைகள் தோன்றும். ஆறும் மாதத்தில் செவித்துவாரம் திறக்கும். ஏழாம் மாதத்தில் குறிகள் தோன்றும். எட்டாம் மாதத்தில் கொப்பூழ், மணிக்கட்டு முதலிய சந்திகள் தோன்றும். ஒன்பதாம் மாதத்தில் இதயம், மயிர், நகம் முதலிய துணை உறுப்புக்கள், பிராணன் அபானன் முதலிய பத்துக் காற்றுக்கள் எல்லாம் சேர்ந்து முழுவளர்ச்சி அடையும். தாய் உண்ணும் உணவின் சாரத்தில் ஒருபகுதி கொப்பூழ்க்கொடியின் வழியாகக் குழந்தை வயிற்றை அடையும். அதனுல் குழந்தை வளர்ச்சியுற்று மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய உட்கரணங்களைப் பெற்று இன்பத் துன்பங்களை நுகரும். அடபோது போன போன பிறவிகளில் செய்த புண்ணிய பாவங்கள் குழந்தையின் புத்தியிலே கனவுபோலத் தோன்றும். அதனுல் அஞ்ஞானம் நீங்கும். அப்போது இதுவரையில் பல பிறவிகள் எடுத்துத் துன்புற்றிருக்கிறேம். இனிப் பிறவி எடுக்கமாட்டோம். எடுத்த இப்பிறவியிலேயே சிவபெருமான் அருளைப் பெற்று ஞானசாரியனின் திருவருளை அடைந்து வேதாகமங்களைக்கற்றுத் தெளிந்து, ஞானம் பெற்றுப் பிறப்பை நீக்கிவிட்டு மோட்சத்தை அடைவோம்என்று எண்ணி இருக்கும்.

இங்ஙனம் எண்ணிக்கொண்டிருக்கும்போதே கருப்பாசயத்தில் நெருக்குண்டு மலையின்கீழ் அகப்பட்டதைப்போல் துடிக்கும். தாயின் வயிற்றுத் தீ சுடுதலால் துன்புறும். அப்போது வியானன் என்னும் காற்று, தலைகீழாகப்பிடித்து உந்தித்தள்ள மயங்கி வெளியிலே பிறக்கும். இங்ஙனம் உயிர் சூக்கும உடலையும் தூல உடலையும் பெற்று, தான் தான் என்று அகங்கரித்து புண்ணிய பாவங்களைச் செய்து மீண்டும் மீண்டும் பிறந்து இறந்து

உழலும். இங்ஙனம் எடுத்த உடலில் மூன்றரைக்கோடி உரோமங்களும் நாடி நரம்புகளும் முப்பத்து இரண்டு பற்களும் பத்தும் பத்துமாய் நகங்களைப் பெற்று விளங்கும். நாடி நரம்புகளின் தொகையைப் பற்றி வேதாகமங்களுக்குள் மாறுபட்ட கருத்துக்களும் உண்டு. சங்கார காலந்தோறும் படைப்புக்கள் மாறுபடுவதால் அக்காலத்தில் தோன்றிய நூல்களும் மாறுகச் சொல்லுகின்றனவே அல்லாமல் வேறுபாடு இல்லை.

( தொடரும் )

## இந்தியப் பண்பாட்டின் ஏற்றம்

1971-ஆம் ஆண்டின் இடையிலே சோவியத் ருஷ்யாவிலிருந்து விஞ்ஞானியர் அடங்கிய ஆய்வுக் குழு ஒன்று நம் நாட்டுக்கு வந்தது. அதன் தலைவராக விளங்கியவர் புகழ் பெற்ற விஞ்ஞானியான சிரோவிச் என்பவர். குழுவினர் நம்நாட்டு மக்களின் வாழ்வு நிலைகளைப் பல்வேறு கோணங்களிலிருந்து கண்டு ஆய்ந்து சில முடிவு கண்டார்கள்.

1. அணுவாற்றல் கதிர்வீச்சிலிருந்து மக்களைக் காப்பதிலே பசுவின் பாலுக்கு உள்ள ஆற்றல் எதனினும் மிகுந்து காணப்படுகிறது.

2. பசுவின் சாணம் கொண்டு மெழுகப்பெற்ற இல்லங்களில் அணுவாற்றல் கதிர் வீச்சின் பாதிப்பு இருப்பதேயில்லை.

3. பசு நெய்யை நெருப்பிலே பொழிந்து புகையுண்டாகச் செய்தால், அப்படி எழும் புகை வாயு மண்டலத்திலுள்ள அணுவாற்றல் கதிர் வீச்சின் விளைவுகளை வெகுவாக மட்டுப்படுத்திவிடுகிறது (இப்படிப் பசு நெய்யை எரியில் பெய்வதையே 'ஹவனம்' என்பார்கள் மறையோர்).

நன்றி — மஞ்சரி, நவம்பர் 1973.

# பிறப்பு நீங்க வழி!

இரா. செ.

பிறப்பு கொடுமையானது : பிறப்பை விடுத்து இறைவன் திருவடிகளில் சேர விரும்பாதார் யார்? விருப்பம் எல்லார்க்கும் உரியது. ஆனால் பிறப்பை விடுப்பது எப்படி? அருளாளர் மொழிகளும் - சமயங்களும் ஆயிரமாயிரம் வழிகளைச் சொல்லிக்காட்டின. கடுந்தவத்தையும், அரிய நோன்புகளையும் அவை வலியுறுத்தின. பிறப்பை விடுதற்கு எளிய வழியே இல்லையா ?

இருக்கிறது என்கின்றார் தருமையாதீனக் குருமுதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்தர். எளிமைபோல ஐந்து செயல்களை மேற்கொள்ளச் சொல்லிக் கடிய பிறப்பை ஒழிக்க வழி காட்டுகிறார்

1. உன்னையே நீ பெரியவன் என்று எண்ணாதே!
2. எல்லாம் நான் என்று நினைத்தலை விட்டுவிடு!
3. மின்னலை ஒத்துத் தோன்றி அழியும் உலகில் பற்று வைக்காதே!
4. உடம்பின்மேல் உள்ள ஆசையை வெறுத்துவிடு.
5. இறையுணர்வை நெஞ்சில் சேர்த்து வை.

இதனைச் செய்ய இயலாதார் யார் என்று கேட்பது போல் அமையும் இனிய பாடல் அவர் அருளிய சிவபோக சாரத்தில் அமைகிறது.

பாடல் இதோ :-

தன்பெருமை எண்ணாமை; தற்போத மேயிறத்தல்
மின்பெருமை யாம்சகத்தை வேண்டாமை - தன்பால்
உடலைத் தினம்பழித்தல் ஓங்குசிவத் தொன்றல்
நடலைப் பிறப்பொழியும் நாள்

— ஸ்ரீ குருஞானசம்பந்தர்.

# மணிவாசகரும் தில்லையும்

## திரு. என். இராமகிருஷ்ணு

தமிழ் நாட்டில் எல்லா ஊர்களிலும் கோயில்கள் உண்டு. சில ஊர்களில் பலகோயில்கள் உள்ளன. "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது பழமொழி. ஆனால் தமிழ் நாட்டுக்காரர்களுக்கே பொதுவான கோயில் ஒன்று உளது. அதுதான் தில்லைக் கோயில். சைவர்கள் "கோயில்" என்றவுடன் ஆனந்த நடராஜர் கூத்தாடும் சிதம்பரத்தைத் தான் நினைப்பார்கள். கூத்தபிரான் எல்லோருக்கும் பொதுவான கடவுள் அல்லவா ?

சைவ சமயாசாரியார்கள் நால்வரும் தில்லை நடராஜரைத் தரிசித்துப் பாடியுள்ளார்கள். இவர்களில் மாணிக்கவாசகர் பெற்றஇன்பம் தனியானது. ஏனெனில் அவர் இறைவனோடு கலந்த இடம் சிதம்பரம்.

சிதம்பரம் கோவில் மிகப்பெரியது; நான்கு திசைகளிலும் கோபுரங்கள் உள்ளன. நான்கு வாயில்களின் வழியே சமயாசாரியார்கள் வந்தார்கள் என்பது ஒருசெய்தி. நடராஜப் பெருமான் தெற்கு நோக்கித்தாண்டவம் ஆடுகிருர். மணிவாசகர் அவருக்கு இடப்பக்கமாக, கிழக்குப் பக்க வாயில் வழியாகப் புகுந்தாராம். ஏன் இடப்பக்கமாக வந்தார்? இறைவனை நாயகராகவும் தன்னை நாயகியாகவும் கொண்டு சன்மார்க்க நெறியில் நின்றவர். புராணங்கள் வாயிலாக நாம் அறிவது குழந்தையாகிய சம்பந்தர் நேர்முகமாக வந்தார், அப்பர் ஊழியர்போல் மேற்குப் பக்கத்திலிருந்து வந்தார், நண்பராகிய சுந்தரர் பின்புறமாக வந்தார்.

மாணிக்கவாசகர் மன்னனிடம் விடைபெற்று, திருப்பெருந்துறையை அடைந்து சிலகாலம் தங்கினுர். பின்பு பல தலங்கள் சென்று தரிசித்துக் கடைசியில் சிதம்பரத்தை அடைந்தார். சிதம்பரத்திற்குப் புலியூர் என்ற பெயர் உண்டு.

மாணிக்கவாசகர் இங்குப் பல பாடல்கள் பாடினுர். ஒருதவச் சாலை அமைத்து சிவயோகம் புரிந்தார். அப்பொழுது சில பௌத்தர்கள் தில்லை மூவாயிரவரை வாதத்திற்கு அழைத்தார்

கள். அவர்கள் அம்பலவாணரிடம் முறையிட்டார்கள். அம்பலவாணன், ஒருவர் கனவில் தோன்றி சிவயோகத்தில் உள்ள திருவாதவூரரை வாதம் புரியும்படி கூறுங்கள் என்று பணித்தார். ஆனால் அவர் வர மறுத்தார். தில்லைவாழ் அந்தணர் மீண்டும் அம்பலவாணரிடம் முறையிட்டனர். மாணிக்கவாசகன் என்று கூப்பிட்டால் வருவான் என்று கூறினர். அப்படியே அந்தணர்கள் சென்று அழைத்த போது "இந்தப் பெயர் எனக்கும் இறைவனுக்கும் மட்டுமே தெரியும்; ஆதலால் இவர்கள் எம்பெருமான் மூலமே அறிந்திருக்கவேண்டும்" என்று எண்ணி வாதம் செய்ய ஒப்புக்கொண்டு வாதம் செய்யச் சென்றார்.

பௌத்தர்களுடன் இலங்கை மன்னனும் அவனுடைய ஊமைப் பெண்ணும் வந்திருந்தனர். சபை கூடியது; சோழ மன்னனும் வந்திருந்தான். மணிவாசகர் சைவ சமயத்தின் பெருமையைக் கூறியபோது பௌத்தர்கள் இழித்துக் கூறினர். மணிவாசகர் ஊமைப்பெண்ணைப் பார்த்து சில கேள்விகள் கேட்டார். உடனே அப்பெண் வாய் திறந்து பதில் தந்தாள். பௌத்தர்கள் சரண் அடைந்தனர். இலங்கை மன்னன் சைவனானன்.

மீண்டும் மாணிக்கவாசகர் தவயோகத்தில் மூழ்கினர். இறைவன் அந்தணர் வேடத்தில் வந்து அவர்முன் நின்றார். கையில் ஏடும் எழுத்தாணியும் ஏந்தியிருந்தார். தன் ஊர் திருப்பெருந்துறை என்று கூறினர். இதுகேட்டு மணிவாசகர் சந்தோஷம் கொண்டார். யாது வேண்டும் என்று கேட்டார். "தாங்கள் பாடிய திருவாசகப்பனுவலை எழுதிக்கொண்டு போக வந்தேன் என்று அந்தணர் கூற மணிவாசகர் தான் பாடியவற்றைச் சொல்லத்தொடங்கினர். இறைவன் எல்லாம் எழுதி முடித்த பின் "பாவை பாடிய வாயால் கோவை பாட வேண்டும்" என்று கேட்க மணிவாசகர் திருக்கோவையார் பாடினர்.

"மாணிக்கவாசகர் மொழிந்தவாறே எழுதினேன்" அழகிய திருச்சிற்றம்பலவாணன் கை எழுத்து" என்று கைச்சாத்து இட்டு ஏட்டைக் கட்டிக்கொண்டு மறைந்து போனர். வந்தவர் பெருமானே என்று அறிந்த மணிவாசகர் ஆனந்தமடைந்தார். ஆடிப்பாடி அழுது தொழுதார்.

மறுநாள் பூஜை செய்யச்சென்ற அந்தணர் பஞ்சாட்சரப் படியில் ஓர் ஏட்டுச்சுவடி இருப்பதைப் பார்த்தார். எல்லோரையும் அழைத்துக் காட்டினர். மணிவாசகர் பாடிய திருவாசகம் அவர்களை இன்புறச் செய்தது. அதை எடுத்துக்கொண்டு மணிவா

சகரிடம் சென்று கேட்க, அவர் எல்லாவற்றையும் கூறி "எல்லாம் சிவன் செயல்" என்று மனம் உருகினர். பின்பு எல்லோரும் திருவாசகத்தின் பொருள் கேட்க, "கனக சபையின் முன் கூறுகின்றேன்" என்ருர். மணிவாசகர் எல்லோரும் வந்ததும் நடராஜப்பெருமானை சுட்டிக்காட்டி "இவரே திருவாசகத்தின் பொருள்" என்று சொல்லி மறைந்தார். அன்று ஆனி மாதம் மகம் நட்சத்திரம்.

தில்லையில் மாணிக்கவாசகரோடு தொடர்புடைய இடங்களும் சிற்பங்களும் உள்ளன. கோவிலில் அவர் தீட்சைபெற்ற சிற்பமும், கனகசபை பக்கலில் உள்ளன. பரி நரியாக்கிய திருவிளையாடல் சிற்பமும் உள்ளது. மணிவாசகர் உற்சவமூர்த்தி கையில் ஏட்டுடன் உள்ளது.

திருவாதிரை முடிய பத்து நாளும் ஆலயத்தில் தேவார திருவாசகங்களை ஓதாமல் திருவெம்பாவையை மட்டும் ஓதுகின்ருர்கள். மணிவாசகர் எம்பெருமானை நோக்கியபடியே எழுந்தருளுவார்.

மணிவாசகர் தங்கியிருந்தாகச் சொல்லும் இடம் தில்லைகாளி அம்மன் கோவிலுக்குப் போகும் வழியில் உள்ளது. திருப்பாற் கடல் என்ற தீர்த்தம் உள்ளது. பக்கலில் ஒருசிறிய ஆலயமும் இருக்கிறது. அதற்கு ஆவுடையார் கோவில் என்றும் பெயர். ஆவுடையார் கோவில் வழிபாடு போலவே இங்கும் நடைபெறுகின்றது. வீர சைவர்கள் இதைப் பாதுகாக்கின்ருர்கள். மணிவாசகருக்குக் கோவில் இல்லை. ஆனல் திருவுருவம் உள்ளது. கையில் ஜபமாலையுடன் காட்சியளிக்கின்ருர். இறைவன் எழுத மணிவாசகர் ஒவ்வொரு பாடலாக யோசித்துச் சொன்னதாகக் கொள்ளலாம்.

திருவாசகத்தின் மூல ஏடு ஒரு மடாதிபதியிடம் உள்ளதாக கேள்வி. காலம் சரியாக விளங்கவில்லை. ஆனல் கல்வெட்டு ஒன்று உளது. அம்பலத்தாடி மடம் ஒன்று உள்ளது. இம் மடத்தின் முதல் தலைவர் மணிவாசகர் காலத்தில் இருந்து இருக்கவேண்டும்.

மணிவாசகருக்குப் பின் தில்லைவாழ் அந்தணர்கள் ஏட்டை எடுத்து வைத்திருந்தார்கள். பலரும் அதைக் கேட்டார்கள். அப்பொழுது அசரீரியாக ஓர் குரல் கேட்டது. "சுவடிகளைச் சிவ கங்கையில் விட்டு விடுங்கள். அது யாருடைய கரத்தில் வருகின்றதோ அவரே அந்தஏட்டுக் குஉரியவர்" அப்படியே செய்ய

அதுகரையில் நின்றிருந்த வீரசைவர் ஒருவரிடம் சேர்ந்தது அவரே அம்பலத்தாடுவார். அவருக்குப்பிறகு இம்மடத்தின் தலைவர்கள் திருவாசகம் உள்ள பெட்டகத்தைப் பூஜித்து வருகிறார்கள். இப்போது பெட்டகம் புதுச்சேரியில் உள்ளது என்று கூறுகின்றனர். இப்பெட்டகத்தை யாரும் திறந்து பார்த்ததில்லை. திருவாசகம் பூஜிக்கப்படுகின்ற ஒரு நூல். இத்தகைய பெருமை மற்ற நூல்களுக்கு இல்லை. இதற்குக் காரணம் சிவபெருமானே திருவாசகத்தை ஏட்டில் எழுதினான் என்பதே.


(இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளவை என் ஆசிரியர் திரு. கி. வா. ஜ. அவர்களுடன் தில்லை சென்ற போதுகேட்டு அறிந்தவை. அவர்களுக்கு என் நன்றி.)

## இராஜாஜி சிந்தனை

நான் ஒரு தோட்டக்காரன் என்று வைத்துக் கொள்வோம். நான் சரியாக வேலை செய்கின்றேனா என்று பார்க்க எனக்கு ஒரு மேற்பார்வை அதிகாரி இருக்கக்கூடாது. நானே தான் ஒழுங்காக என்னுடைய வேலையைச் செய்ய வேண்டும். தேனீக்களைப் பார்த்திருக்கலாம். ஒவ்வொன்றும் தேன் சேகரித்துக்கொண்டு வருகின்றன. விரைவில் தேனடை நிரம்பி விடுகிறது. ஈக்கள் சரியாக வேலைசெய்கின்றனவா என்று யாரும் மேற்பார்வை யிடுவது இல்லை. நாமும் அதுபோலவே இருக்க வேண்டும். ஒவ்வொருவரும் நாணயமாகவும், சுறுசுறுப்புடனும் நடக்க வேண்டும். யாருடைய தூண்டுதலும், மிரட்டலும் இல்லாமல் ஒவ்வொரு தொழிலாளியும் , தன்னுடைய வேலையை ஒழுங்காகச் செய்வதைப் பெருமையாகவும் கௌரவமாகவும் கருத வேண்டும்.

— நன்றி : கல்கி, 25—11—73.

தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்



இன்றெமது நல்லிதழைப் புரந்துவரும் எம்முதல்வர்
மன்றுபுகழ்ச் சண்முகதே சிகருளின் திருத்தோற்றம்.

# “ சிலப்பதிகாரக் கருத்தரங்கு ”

டாக்டர். திரு. வ. சுப. மாணிக்கம், எம். ஏ.,
எம். ஓ. எல்., பிஎச். டி.

சிலப்பதிகாரம் என்ற காப்பியம் பற்றி 17, 18—11—73 சனி, ஞாயிறு ஆகிய இரு நாட்களிலும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறையாசிரியர் 7-ஆவது கருத்தரங்குசிறப்பாக நடைபெற்றது. பல்துறையாசிரியர்களும் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் 400 பேர்களும் விருந்தினர்களும் அரங்கில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

தமிழ்த்துறைப் பேராசிரியர் டாக்டர். வ. சுப. மாணிக்கம் தம் வரவேற்புரையில் பல்கலைக் கழகத்தின் முதன்மையான குறிக்கோள் ஆராய்ச்சி. ஆசிரியர்களுக்கேயன்றி மாணவர்களுக்கும் ஆராய்ச்சி மனப்பான்மை படிக்கும்போதே உடன் வளர வேண்டும். தமிழ்த்துறையாசிரியர்கள் பாடஞ்சொல்லியதோடு அமையாது ஆராய்ச்சியும் உடன் செய்து வருகிறார்கள் என்பதற்கு இக்கருத்தரங்குகள் சான்றுகளாக உள்ளன. பல்கலைக் கழகத்து நிதி உதவியினால் ஆய்வுக் கட்டுரைகள், இன்று நூல் உருப்பெற்றுள்ளன என்று கூறி, தமிழ் வளர்ச்சிக்கு என்றும் துணைசெய்து வரும் துணைவேந்தரின் தமிழ் நெஞ்சத்தைப் பாராட்டினார்.

பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர். சா. ப. ஆதி நாராயணா விழாவிற்குத் தலைமை ஏற்றுத் தொடக்கவுரை நிகழ்த்துகையில் மாணவர்கள் நுட்பமாக வினாக்கள் கேட்பதையும் தமிழ்த்துறை புதியதோர் முறையில் தொடர்ந்து கருத்தரங்கு நடத்தி வருவதையும் பாராட்டி இவ்வாறு தொடர்ந்து நடக்கும் முயற்சியைப் பல்கலைக் கழகம் என்றும் ஆதரிக்கும் எனவும் கூறினார். பின்னர் முந்திய கருத்தரங்குகளில் ஆய்ந்த சில கட்டுரைகள் அடங்கிய இலக்கணச் சிந்தனைகள், இலக்கியச் சிந்தனைகள் என்ற இரு ஆராய்ச்சி நூல்களையும் வெளியிட்டார். பல்கலைக் கழக நூல் வெளியீட்டகப் பொறுப்பாளர் திரு. ஆறு. அழகப்பன் நன்றி கூறினார்.

17—11—73 பிற்பகல் கருத்தரங்கு, திருக்குறள் ஆராய்ச்சி விரிவுரையாளர் திரு. ச. தண்டபாணி தேசிகர் தலைமையில் நிகழ்ந்தது. திரு. ஆ. இராமசாமிப் பிள்ளை, 'சிலப்பதிகாரக் கதை' என்ற தம் கட்டுரையில் சிலப்பதிகாரக் கதைக்கும் பின்னர் தோன்றிய கண்ணகி வழக்குரை, கோவிலன் கதை ஆகிய இரு நாட்டுக் கதைகளுக்கும் உள்ள வேறுபாடுகளைச் சுட்டினார். திரு. க. தியாகராசன் 'சிலம்பில் பாண்டியன்' என்ற தம் கட்டுரையில் பல்லவ மன்னனின் சலிப்புணர்ச்சியால் நாவரசர் கொலைத் தண்டனை பெற்றது போன்று பாண்டியனின் சலிப்புணர்ச்சியால் கோவலனும் கொலைத்தண்டனை பெற்றான் என்பதைக் குறிப்பிட்டார். திரு. க. வெள்ளைவாரணன் 'சிலம்பில் சைவம்' என்ற தம் சமயக் கட்டுரையில் இக்காப்பியத்தில் காணப்பெறும் சிவவழிபாட்டுச் சிறப்பியல்புகளையும், இறைவன் பெரியோன், உயர்ந்தோன் முதலிய சொற்களால் சிவபெருமான் இந்நூலுள் சிறந்து போற்றப் பெறுதலையும், சைவச் சொற்கள் சமணர்களால் மேற்கொள்ளப்பட்டதையும் புலப்படுத்தினர்.

18—11—73 முற்பகல் கருத்தரங்கிற்குத் துணைப்பேராசிரியர் திரு. க. வெள்ளைவாரணனர் தலைமை தாங்கினர். திரு வெ. பழநியப்பன் 'சிலம்பில் பாலைத்திணை' என்ற திணைக் கட்டுரையில் பாலைக்குக் கொற்றவையைத் தெய்வமாகக் கூறியதோடு வஞ்சிக் காண்டத்தில் பாலையையும் வாகையையும் இணைத்துப் பாடியுள்ளார் என்று காட்டினர். 'சிலம்பில் கவின்கலைகள்' என்ற கட்டுரையைப் படித்த திரு. செ. வைத்தியலிங்கம் ஓவியம், சிற்பம், கூத்து, குரவை முதலிய கலை பற்றிய நுண் குறிப்புக்கள் காப்பியம் முழுதும் மலிந்து கிடப்பதை வெளிப்படுத்தினர். 'சிலம்பில் சமணம்' என்று ஆய்வுரை வழங்கிய திரு ச. தண்டபாணி தேசிகர் இக்காப்பியத்தில் சமணமே தாய்ச்சரக்கு; ஏனைச் சமயங்கள் துணைச்சரக்கு; சமயத் தத்துவங்கள் வரலாற்று ஓட்டத்தில் கலந்துள்ளன என்று மொழிந்தார். திரு. கொ. இலக்குமணசாமி 'வரலாற்றுப் பின்னணி' என்ற கட்டுரைகள் சங்ககால வரலாற்றுக் கருத்துக்களைத் தழுவி இளங்கோ காப்பியம் செய்தார். பண்டு வழங்கிய கதைக் கூறுகளை மூவர் காலத்தும் நிகழ்ந்தவை எனக் கற்பித்தார். உண்மையான மன்னர் பெயர்கள் நூலகத்துக் காணப்படவில்லை என்று தம் கருத்துக்களை வெளியிட்டார். தமிழ்ப்பேராசிரியர் டாக்டர் வ. சுப. மாணிக்கம் 'சிலம்பில் புதிய மொழிக் கூறுகள்' என்ற தம் கட்டுரையில் ஆர், வாணுட்கள், கின்று, உண்ணுத, நான் என்ற புதுக்கூறுகள் புகுந்துள்ளன; சிலம்பில் இக்கூறுகள் வந்துள்ள எண் அளவைப் பார்க்குங்கால் இவை புதிய வரவின, இக்கூறுகள்

மணிமேகலைக் காப்பியத்தும் காணப்படலால் மொழி காரணத்தாலும் இவற்றை இரட்டைக் காப்பியங்கள் என நிறுவலாம். இக்காப்பியம் சங்கப்போக்குடையது ஆதலின் கி. பி. 3ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திற்குப் பிற்பட்டது ஆகாது. இதனைக் கால எல்லையாகக்கொண்டு சங்க நூல்களில் கி மு. விற்கு முன்னர் வைத்துப் பார்க்கவேண்டும் என முடிவு கூறினார்.

பிற்பகல் கருத்தரங்கு, தமிழ்ப்பேராசிரியர் டாக்டர் வ சுப. மாணிக்கம் தலைமையில் நிகழ்ந்தது. 'சிலம்பில் நெய்தல் திணை' என்னும் தம் திணைக் கட்டுரையில் திரு அ. ஆனந்த நடராசன் கானல் வரிக் காதையுள் நெய்தல் திணைக் கூறுகள் நிரம்பவுள. நெய்தலின் புறமாகிய தும்பைத்திணை வஞ்சிக்காண்டத்துள் இடம் பெறுகிறது என்று தெரிவித்தார். டாக்டர் மு. கோவிந்தசாமி 'சிலம்பில் வரலாற்றுச் செய்திகள்' என்ற தம் கட்டுரையில் கண்ணகி கோவிலுக்கும் திரௌபதி அம்மன் கோயிலுக்கும் உரிய தொடர்புகளைச் சுட்டி மணிமேகலையில் அறவண அடிகள் வரலாறு சிலம்புக் காலத்தின் பின் எல்லையை வரையறுக்க ஒரு சான்றாகும் என்பதை எடுத்துரைத்தார். திரு நா. இராஜகோபாலன் 'காப்பிய அமைப்பு' என்ற கட்டுரையுள் சமயக் கருத்துக்கள் பலவற்றையும் குறைபாடின்றி இக் காப்பியம் காட்டுகிறது. காப்பியத் தொடக்கமே தெய்வத்தன்மையோடு செல்கிறது என்று கூறினார். 'சிலம்பில் வைணவம்' என்ற தம் சமயக் கட்டுரையில் திரு. பி. சி. இராமாநுசாச்சாரியார் இன்று நாம் கொள்ளும் வைணவத் தத்துவக் கருத்துக்களுக்கு சிலம்பில் இடம் இல்லை, திருமாலை முழு முதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் முறையே காணப்படுகிறது. செங்குட்டுவன் திருமால் சேடத்தைத் தோளில் புனைந்தது வெற்றிக் குறிப்பு என்றும் தெளிவு செய்தார். 'சிலம்பில் யாப்பமைதி' என்ற கட்டுரை வழங்கிய திரு. ந. வி. செயராமன் முதற் காதையாகிய மங்கல வாழ்த்துப் பாடல் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா, இதன் இலக்கணம் தொல்காப்பியத்தில் இல்லை, எனினும் பின்னைய இலக்கண நூல்களில் உண்டு. இக்காதையை இவ்வாறு கலிப்பா உறுப்புக்களாகப் பகுத்துக் கொள்ளலாம் என எடுத்துரைத்தார். டாக்டர் சோ. ந. கந்தசாமி 'சிலம்பில் பௌத்தம்' என்ற சமயக் கட்டுரையில் எம் குலதெய்வப் பெயர் ஈங்கிடுக என்றதனால் கோவலன் பௌத்த மதத்தைச் சேர்ந்தவன், சிலம்பில் இருவகைப் பௌத்தக் குறிப்புக்களும் உள. சிலம்பின் இறுதியில் வரும் நீதிகள் புத்தப் பொன்மொழிகளின் தொகுப்பு என்று விளக்கினார்.

பார்வையாளராக வந்திருந்த இலக்கிய வரலாற்றுப் பேரா சிரியர் திருச்சிற்றம்பலம் திரு. மு. அருணசலம் சிவகதி என்ற சொல் சிலப்பதிகாரத்தில் முதற்கண் வந்து அருகனைக் குறிப்ப தாக இருந்தாலும் வேதத்தில் இச்சொல் சிவனுக்கு உரிய தாக முன்னரே காணப்படுகின்றது. கி. பி. 3ம் நூற்றுண்டிற்குப் பின்னர் இசைக்கலையும் பிறவும் இழிவு பெற்றுவிட்டன. ஆத லால் இக்கலைகளைப் போற்றும் சிலப்பதிகாரம் கி, பி. 3ஆம் நூற்றுண்டிற்கு முந்தியது என்று கூறி சில கருத்துக்களை எடுத்து விளக்கித் திரளாக மாணவர்கள் குழுமி ஆசிரியர் களோடு கலந்துரையாடும் இக்கருத்தரங்கு நல்ல அறிவுப்பணி நல்குவது என்று பாராட்டினர். திரு. வெ. செயராமன் நன்றி கூறக் கூட்டம் இனிது முடிவுற்றது.

## ஒன்றரை விநாடிக்கு ஒரு குழந்தை

இந்தியாவில் ஜனத்தொகைப் பெருக்கம் 55 கோடியைத் தாண்டிவிட்டது. குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் தீவிர மாக அரசால் செயற்படுத்தப்படுகிறது. ஒன்றரை விநா டிக்கு ஒரு குழந்தை வீதம் இந்தியாவில் பிறக்கிறதாம்! ஒரு நாளைக்கு 57,000 குழந்தைகள்! ஓர் ஆண்டில் 21 மில் லியன்! தலையைச் சுற்றும் பெருக்கம் இது.

குழந்தைகள் இறப்பு ஓர் ஆண்டுக்கு 8 மில்லியன்தான். ஆதலால் ஆண்டுக்காண்டு 13 மில்லியன் மக்கள் பெருகு கின்றனர். ஆஸ்திரேலியாவின் மொத்த ஜனத்தொகையே சுமார் 14 மில்லியன்தான்! இந்த ரீதியில் பெருகினுல் இன்னும் இருபத்தைந்து ஆண்டுகளில் 100 கோடியை எட்டிவிடலாம்!

சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னுல் நமது நாட் டின் பிறப்பு விகிதம் ஆயிரத்துக்கு 49 ஆகவும், இறப்பு விகிதம் 48 ஆகவும் இருந்தது. இன்று பிறப்பு 41 ஆகவும் இறப்பு 16 ஆகவும் இருக்கிறது. அதனுல்தான் விஷம் போல் ஜனத்தொகை ஏறுகிறது!

நன்றி: — கலைமகள், டிசம்பர் '73.

# பெண்களுக்கு அறிவுரை

## திருமதி. அம்புஜம்மாள்

**மக்கள் பொறுப்பற்ற வாழ்க்கை வாழ்வதற்குள்ள காரணங்கள் :-**

"இளைய தலைமுறைக்கு நான் சொல்வது எதுவும் அப்பீல் ஆகாது. அந்தக் காலத்தில் பெண்கள் விடுதலைக்குப் பாடுபட்டதற்கும் இப்போது 'விமன்ஸ் லிப்' (Women's Lib) என்பதற்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்கிறது". "உயர்தரக் கல்வி எல்லாப் பெண்களுக்கும் அவசியம் தானா" என்று கேட்கிறார், திருமதி அம்புஜம்மாள். "அடுத்த வருஷம் கல்யாணம் செய்துகொள்கிற பெண்ணுக்கு இந்த வருஷம் எதற்குக் கல்லூரி அட்மிஷன்" என்கிறார்.

ஆண்களுக்குப் போட்டியாகப் பெண்கள் வேலைக்குப் போவதை இவர் சற்றும் விரும்பவில்லை. "பெண்களுக்கு இப்போது ஏராளமான சுதந்திரம் கிடைத்திருக்கிறது. இனியும் சுதந்திரம் வேண்டும் என்று கேட்பது அர்த்தமில்லாதது" என்பது இவர் கருத்து. அவசியம் வேலைக்குப் போய்த்தான் ஆகவேண்டும் என்று இருந்தாலொழிய பெண்கள் வேலை பார்க்கப்போவது சரியாகப்படவில்லை அம்புஜம்மாளுக்கு.

* * * *

ஆசைகள் பலவீனங்கள் இவற்றிலிருந்து எப்படித்தப்புவது? இதற்கு அவருடைய ஒரே பதில் "வாழ்க்கையில் எல்லாவற்றையும் அடைவதுஎன்பது இயலாது. சிலவற்றை அடையமுடியாது தான்; என்ன செய்வது"

* * * *

ஆசிரமங்கள், அநாதை விடுதிகள் - இவற்றைப்பற்றிய இவருடைய கருத்து :- "இவற்றால் ஜனங்களுக்குப் பொறுப்பற்ற தன்மை மிகுந்துகொண்டு வருகிறது. பிள்ளையைப்பெற்று அநாதை விடுதியிலே விட்டுவிட்டு மீண்டும் பொறுப்பில்லாத வாழ்க்கையே வாழ்வார்கள்".

சமூக சேவை செய்ய விரும்பும் பெண்களுக்கு இவருடைய யோசனை என்ன? "ஒரு பெண்ணுக்கு அவளுடைய கணவனையும் குழந்தைகளையும் பராமரிப்பதுதான் முதல் கடமை. சமூக சேவைக்குவர வேண்டுமானால் குடும்பத்தைத் துறக்க வேண்டியிருக்கும்" என்கிறார். தொடர்ந்து 'நாங்கள் சமூக சேவை செய்த அந்தக்காலம் வேறு. இன்றைய சூழ்நிலை வேறு" என்கிறார்.

இவர் எழுதிய புத்தகத்தைப் போலவே வெளிப்படையாக, சுவையாக இருக்கிறது இவர் பேச்சும்.

நன்றி. — பாகீரதி.

— ஆனந்தவிகடன் 12—12—1973.

## உலக நாடுகளில் மக்கள் தொகை

உலகில் மக்கள் தொகையைப் பெரிய அளவில் பெற்று, பெரிய நாடுகள் என்ற பெயருடன் விளங்குபவை சீனு, இந்தியா, சோவியத் ரஷ்யா, அமெரிக்க ஐக்கிய நாடு, இந்தோனேசியா ஆகியவையே. 1971-ஆம் ஆண்டு ஐ. நா. மன்ற மக்கள்தொகைப் புள்ளி விவரப் புத்தகத்தின்படி, மேற்சொன்ன நாடுகளின் மக்கள் தொகை முறையே 78.7 கோடி, 55 கோடி, 24.5 கோடி, 20.7 கோடி, 12.5 கோடியாகும்.

லத்தீன் அமெரிக்கப் பகுதியில் பிரேசில் நாடும், ஆப்பிரிக்கப் பகுதியில் நைஜீரியாவும் அதிக மக்கள் தொகையுடைய நாடாக இருக்கின்றன. அவற்றின் மக்கள் தொகை முறையே 9.5 கோடி, 5.7 கோடி.

மேலும் உலகத்து மொத்த மக்கள் தொகையில் பாதிக்கு மேற்பட்டவர்கள், ஏறத்தாழ 210 கோடி மக்கள் ஆசியாவில் வாழ்கிருர்கள். சோவியத் ரஷ்யா சேராத ஐரோப்பாவில் 46.6 கோடி மக்களும், ஆப்பிரிக்காவில் 35.4 கோடியும், வட அமெரிக்காவில் 32.7 கோடியும், தென் அமெரிக்காவில் 19.5 கோடியும் வாழ்கிருர்கள்.

— எஸ். முத்துராமலிங்கம்.

* * * *

## மக்கள் சிந்தனைக்கு ....

ஒவ்வோர் ஆண்டும் 13 மில்லியன் கணக்கில் ஜனத்தொகை பெருகினல் கீழ்க்கண்ட இனங்களும் ஆண்டுக்காண்டு இதே விகிதத்தில் பெருக வேண்டும். உணவுப் பொருள் 1,25,45,300 குவிண்டால்; உறைவிடம் 25,09,000 வீடுகள்; பள்ளிகள் 1,26,500; ஆசிரியர்கள் 3,72,500; உடை 18,87,74,000 மீட்டர்கள்; புதிய வேலை வாய்ப்புக்கள் 40,00,000

ஜனத்தொகைபோல் இந்த வசதிகளும் பெருகுவது சாத்தியமா? இயற்கையை ஓரளவுக்கு மேல் வெற்றி காண முடியாத மனிதன், தன்னையே கட்டுப்படுத்திக்கொள்வது தான் சிறந்தது!

— நன்றி : கலைமகள், டிசம்பர் '73.

மதிப்புரை :

[ சைவ சமயம் : கொழும்பு விவேகானந்தர் சபை வெளியீடு ]

இலங்கை நாட்டிற்கு உள்ள ஒரு சிறப்பு, அதன் அரசாங்கம் "பௌத்தம்" என்னும் ஒரு சமயச் சார்புடையதாய் இருந்தும் எல்லாச் சமயக் கல்வியையும் கல்வி நிலையங்களில் கட்டாய பாடமாக்கிச் சமமாகப் பயிற்றி வருவது. இயல்பாகவே சைவ சமயத்தில் பற்று மிக்கவர்களாகிய இலங்கைத் தமிழ் மக்கள், அரசாங்கம் தந்துள்ள இவ்வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொண்டு, தங்கள் இளந்தலைமுறையினர்க்குச் சைவத்தின் சிறப்பு உண்மை, ஒழுக்கம் என்பவற்றை நன்கு உணர்த்தி, சைவப் பற்றுடையராகச் செய்தல், தமிழக சைவ மக்கட்கும் வழிகாட்டுவதாக உள்ளது.

ஈழத்தில் சைவப் பணி புரிந்து வரும் நிறுவனங்களில் சிறப்புடையதாகக் குறிக்கப்படுவது கொழும்பு விவேகானந்தர்சபை. பல்லாண்டுக் காலமாக இலங்கை முழுவதிலும் உள்ள மாணவர்களுக்குச் சைவ சித்தாந்தப் பரீட்சைகளை நடத்தி வரும் இச்சபையினர், அரசியலார் திட்டப்படி அமைந்த வகுப்புக்களுக்கு அவ்வவ்வகுப்பிற்கு ஏற்ற சைவ சமயப்பாட நூல்களை எழுதி வெளியிட்டுவரும் முறையில், இப்பொழுது தமிழ் நாட்டின் எஸ். எஸ். எல். ஸி., வகுப்பிற்கு ஒப்பான க. பொ. த. (சாதாரணம்) என்னும் வகுப்பிற்கு உரிய பாட நூலாக "சைவ சமயம்" என்னும் நூலை வெளியிட்டிருக்கின்றனர்.

இதனை "ஒரு முழுநூல்" என்றே சொல்லத் தக்க வகையில் சைவ சமயத்தைப் பற்றி அறியத்தக்க பொருள்கள் பலவும் பல தலைப்புக்களின் கீழ்ப் பல பகுதிகளாகப் பிரித்துக் கொடுக்கப் பட்டுள்ளன. முதற் பகுதி இக்கால வரலாற்று முறையில் சைவத்தின் தொன்மை முதலியவற்றை இந்திய நாட்டின் சிந்துவெளி அகழ்வாராய்ச்சி முதலாகத் தொடங்கி விளக்குவதாக அமைந்துள்ளது. இப்பகுதியில் திருமுறைகள், சித்தாந்த சாத்திரங்கள், ஈழத்துச் சிவாலயங்கள், ஆறுமுக நாவலரது சைவப் பணிகள், சைவ ஆதீனங்களின் தோற்றம் - வளர்ச்சி - சேவை ஆகிய வரலாறுகளும் சொல்லப்பட்டிருப்பது பயனுடையதாகும்.

தொடர்ந்து வரும் மற்றைப் பகுதிகளில் சைவ சித்தாந்தத் தத்துவம், சைவ சமய சாதனங்கள், விரதங்கள் என்பவற்றுடன், பூர்வ அபரக் கிரியைகளும் சொல்லப்பட்டுள்ளமை இந்நூற்கு

நிறைவை அளிக்கின்றது. நூலின் முடிவாகத் தேவாரத் திருப்பதிகங்கள் சில, திருவாசகத்தில் திருவெம்பாவை, திருவிசைப்பா திருப்பல்லாண்டு, பெரியபுராணம், திருப்புகழ் இவற்றின் பாடல்களும், சாத்திரத்தில் திருவருட்பயன் உரையுடனும், சமயாசாரிய சந்தானுசாரியர்களது வரலாற்றுச் சுருக்க உரை நடையும் தரப்பட்டிருத்தல் சிறப்பைத் தருகின்றது. மாணவர்கட்கு உரிய நூலாகப் பயன்படும்படி எளிய நடையும், இறுதியில் விடைப் பயிற்சி வினாக்களும் அமைந்திருத்தல் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது.

தேவாரத் திருப்பதிகங்களில் திருஞானசம்பந்தரது திருப்பதிகத்தின்பின் அப்பர் திருப்பதிகத்தை அமைக்காமல் சுந்தரர் திருப்பதிகத்தைச் சேர்த்திருப்பது அஃது இலங்கைத் தலத்தின் திருப்பதிகம் என்னும் காரணம் பற்றிப்போலும்! எவ்வாருயினும் சம்பந்தர், அப்பர், சுந்தரர் என்னும் முறையில் அவர்களது திருப்பதிகங்கள் அமைவதையே சைவ சமயிகள் விரும்புவர். ஒரு நூலைப் படிக்கும் முன் அதை இயற்றிய ஆசிரியரது வரலாற்றை அறிந்து படிப்பதே முறையாய் இருக்க, திருமுறை சாத்திரங்களை உரையுடன் கொடுத்த பின்பே, சமயாசாரிய சந்தானுசாரியர்களது வரலாற்றைக் கொடுத்திருத்தற்குக் காரணம் அறியக் கூடவில்லை.

கொழும்பு விவேகானந்தர் சபைப் புலவர் குழுவைச் சேர்ந்த பண்டிதர். திரு. ச. சுப்பிரமணியம் அவர்கள், சித்தாந்த பண்டிதர். திரு இ. செல்லத்துரை அவர்கள், புலவர். க கந்தசாமி அவர்கள் ஆகிய மூவர் ஆசிரியரது ஆக்கமாக இந்நூல் அமைந்துள்ளது. இவர்களில் புலவர். க கந்தசாமி அவர்கள் சபையின் பரீட்சைச் செயலாளராய் இருந்து பணிபுரிந்து வரும் வாய்ப்பினை ஒட்டி இந்நூலின் ஆக்கத்திற்கு மிக்க முயற்சி எடுத்துக் கொண்டுள்ளார் என அறிகின்றோம்.

இப்பாடநூல் பலவகையில் மாணவர்களால் நன்கு வரவேற்றுப் பயன் பெறுதற்கு உரியது என்பது உறுதி.

— சி. அருணைவடிவேல் முதலியார்.

# செய்திகள்

## மாயூரம் - வள்ளலார்கோயிலில் துலா மகோற்சவம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான மாயூரம் - வள்ளலார்கோயில் ஸ்ரீ வதான்யேசுவரசுவாமி திருக்கோயிலில் துலா மகோற்சவம் 6—11—73 முதல் 15—11—73 முடிய உள்ள நாட்களில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. 6—11—73 செவ்வாய்க்கிழமையன்று கொடியேற்றமும், 10—11—73 சனிக்கிழமை வெள்ளி இடபவாகனக் காட்சியும், 14—11—73 புதன்கிழமை திருத்தேர்த் திருவிழாவும் 15—11—73 வியாழக்கிழமை அன்று ஸ்ரீ ஞானம்பிகா சமேத ஸ்ரீ வதான்யேசுவரர் காவிரியில் தீர்த்தங்கொடுத்தருளலும் சிறப்பாக நடைபெற்றது. 17—10—73 புதன்கிழமை துலாமாதப் பிறப்பு அன்றும் பெருமான் வெள்ளி இடபவாகனரூடராய் தீர்த்தங்கொடுத்தருளல் நிகழ்ந்தது. ஐப்பசிமாதம் முழுவதும் எல்லாத் தீர்த்தங்களும் தன்பாவம் போக்க, காவிரியில் இடப தீர்த்தத்தில் மூழ்குவதாக ஐதிகம். துலா (ஐப்பசி) மாதத்தின் அமாவாசை முதலாக மாதக் கடைசி வரை கங்கை காவிரியில் இருப்பதாக புராணம் கூறும்.

## திருக்கடவூரில் சங்காபிஷேகம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் கார்த்திகைச் சோமவார நாட்களில் 1008 சங்காபிஷேக விழா மிகச் சிறப்பாக நடைபெறும். பெருமானுக்கு நிகழ்த்தப்பெறும் அபிஷேகங்களில் சங்காபிஷேகம் சிறந்தது. சங்கு மண்டபத்தில் தான்யங்களின்மேல் சங்குகளைப் பரப்பி வலம்புரிச் சங்கை நடுவில் வைத்து 200க்கு மேற்பட்ட பொருள்களுடன் பல்வகைத் தீர்த்தங்களை சங்குகளில் நிரப்பி வேள்வி முதலியவற்றுடன் பூஜை செய்யப்பெறும். பின்னர் சங்குகளை மங்கல வாத்திய முழக்கத்துடன் வலமாக எடுத்துச் சென்று பெருமானுக்கு அபிஷேகம் செய்வார்கள். அன்று சுற்றுப்புறங்களிலிருந்தும் வெளியூர்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் வந்து சங்காபிஷேக தரிசனம் செய்வார்கள். சைவ அன்பர்கள் இந்நாளில் சோமவார நோன்பு மேற்கொண்டு பெருமானை வழிபட்டு நலம்பல பெறுவார்கள்.

19—11—73, 26—11—73, 3—12—73 ஆகிய சோமவார நாட்களில் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்கள் பலர்க்கும் பிரசாதங்கள் வழங்கியருளினார்கள். பெருந்திரளாக அன்பர்கள் வந்து வழிபட்டு மகிழ்ந்தார்கள்.

# எதிர்காலம்

ஜோதிஷார்ணவம்

திரு. K. முத்துஜோதிடர்

( பிரமாதீசஹூ மார்கழிமீ 1௳ முதல் 29௳ முடிய )

( 16—12—73 முதல் 13—1—74 முடிய )

பிரமாதீசஹூ கார்த்திகைமீ 30௳ உதயாதி 42 நாழிகை 28 விநாடிக்கு பூர நக்ஷத்திரமும் - சிம்ம லக்னத்திலும் ஸ்ரீ லோக ரக்ஷகரான ஸ்ரீ சூரிய பகவான் லோக க்ஷேமத்தின் பொருட்டு நல்ல உத்தமோத்தம சுபவேளையில் தனுர் மாச சங்கிரமணம் செய்கிறார். அதன் பலன் உலகம் மேலான நிலைக்கு வந்து புண்ணிய பூமிகள் பூராவும் தக்ஷிண பாரத பூமியும் செழித்து ஓங்கும்.

1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். ஜீவனம் ஓங்கும். நினைத்த காரியங்கள் சுபமாகவே நடக்கும். உலகத்தில் எங்கும் கீர்த்தி உண்டாகும். ஸ்தாவர ஜெங்கம சொத்துக்கள் சேரும். சுபமான காரியங்கள் நடந்துகொண்டு இருக்கும், ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

2. ரிஷபம் – கார்த்திகை ¾ – ரோஹிணி – மிருகசீர்ஷம் ½

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். அடிக்கடி வைத்தியச் செலவுகள் ஏற்படும். ஜீவனத்தில் சில மாறுதல்கள் ஏற்படும். நினைத்த காரியம் எதிர்பார்த்தபடி நடக்காது அடிக்கடி அலைச்சல்கள் ஏற்படும். சொல்ப நஷ்டம் உண்டாகும். செவ்வாய், புதன் சுபமாகும்.

3. மிதுனம்–மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை–புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். வியாதி குணம் அடையும். வீண் அலைச்சல்கள் ஏற்படும். மனம் நிம்மதியாக இருக்காது. குடும்பத்தில் செலவுகள் அதிகமாக இருக்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

4. கடகம் – புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்

கடகராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். வெகு நாளாய் நடைபெருத காரியங்கள் நடக்கும். சஸ்ய தான்யங்கள் விருத்தியாகும், தெய்வபலம் பிரகாசிக்கும். கீர்த்தி பத்திரம் கிடைக்கும். சனி, ஞாயிறு சுபமாகும்.

5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் ¼

சிம்மராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும், குடும்பத்தில் நிம்மதி ஏற்படும். சுபமான காரியங்கள் அடிக்கடி நடந்துகொண்டு இருக்கும். மேலோர் பெரியோர்களுடைய அன்பு கிடைக்கும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

6. கன்னி – உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½

கன்னியாராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். வம்ச விருத்தி ஏற்படும் ஜீவனம் ஓங்கும். எதிர்பாராத சில நன்மைகள் ஏற்படும். மேலோர் பெரியோர்களுடைய அன்பினுலும் ஆதரவாலும் எல்லாக்காரியங்களும் சௌக்கியமாகவே நடக்கும். புதன், வியாழன் சுபமாகும்.

7. துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். அடிக்கடி அலைச்சல்கள் ஏற்படும். மனம் நிம்மதியாக இருக்காது. தெய்வபலத்தால் தானுக எல்லாம் சௌகரியமாக நடக்கும். வெள்ளி, சனி, சுபமாகும்.

8. விருச்சிகம் - விசாகம் ¼ – அனுஷம் – கேட்டை.

விருச்சிகராசி 9 பாதங்களும் ரொம்பவும் சிரமத்தைக் கொடுக்கும். குடும்பத்தில் எதிர்பாராத பல கஷ்டங்களும் செலவுகளும் வந்துகொண்டு இருக்கும். ஜீவனத்தில் சில மாறுதல்கள் ஏற்படும். அலைச்சல்களும் வீணுன அபவாதங்களும் ஏற்படும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

9. தனுசு - மூலம் – பூராடம் – உத்திராடம் ¼

தனூர்ராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். ஜீவனத்தில் பலவிதமான மாறுதல்கள் ஏற்படும், நினைத்த காரியங்கள் கொஞ்சம் தாமதமாகவே நடக்கும். குடும்பச்செலவு கொஞ்சம் அதிகமாக இருக்கும். செவ்வாய், புதன் சுபமாகும்.

10. மகரம்-உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகரராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். வரவு செலவு சமமாக இருக்கும். எப்பொழுதும் அலைச்சல்களும் காரியங்களுக்கு இடையூறுகளும் சொல்பமான நஷ்டமும் ஏற்படும். வைத்தியச்செலவுகள் உண்டாகும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

11. கும்பம் - அவிட்டம் ½-சதயம் -பூரட்டாதி-¾

கும்பராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும், வியாதி குணமடையும். ஜீவனோபாயத்தில் கொஞ்சம் மாறுதல்கள் ஏற்படும். அடிக்கடி அலைச்சல்கள் இருந்துகொண்டே இருக்கும். சனி, ஞாயிறு சுபமாகும்.

12. மீனம் - பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி

மீனராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். அடிக்கடி சஞ்சாரங்கள் இருந்துகொண்டு இருக்கும். உலகத்தில் பிரசித்தி ஏற்படும். கீர்த்திபத்திரம் கிடைக்கும். வரவு செலவு சமமாக இருந்துகொண்டு இருக்கும். தெய்வபலத்திநல் சகலமும் சாத்தியமாகும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

---

EXTRACT FROM THE VISITOR'S BOOK

Dharmapuram Adhinam

Sri Sattanathaswami Devasthanam, Sirkali

"I had the privilege of visiting Sri Sattanathaswamy temple at Sirkali. Sri Souriraja Ayyangar, Supdt. was good enough to accompany us in our visits to the various Sannadhis and parts of the temple. The visit to the temple will be an unforgettable experience for me. This is a remarkably well maintained temple. My thanks to the authorities for the help rendered by them in having a good dharsan.

(Sd.) K. A. Varadan, I. A. S.,
Deputy Secy., Agriculture Dept.
Govt. of Gujarat,
Gandhinagar.

26-9-73.

சிவமயம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான

திருபுவனம்

ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானத்தில்

உலக நலங்கருதி

# ஸ்ரீ சரபமூர்த்திக்கு லட்சார்ச்சனை

நன்னுலிரண்டு திருவடியும் நனிநீள்வாலும் முகம்இரண்டும்
கொன்னுர் சிறகும் உருத்திரமும் கொடும்பேர் ஆர்ப்பும்
எதிர்தோன்றிச்
செந்நீர்பருகிச்செருக்குநர மடங்கல்ஆவி செகுத்து உரிகொண்டு
ஒன்னுர் குலங்கள் முழுதழிக்கும் உடையான் சரபத்திருவுருவம்.

ஆணவத்தால் 'தானேபிரமம்' எனச்செருக்குற்ற இரணியனைப் பிரகலாதன் அன்பிற்கு ஆட்பட்டு நரசிங்க வடிவெடுத்துக் கொன்ருர் திருமால். அவன் குருதியினைப், பருகிய மதமும், கடுங்கோபமும் குறையாத நரசிங்கம் பேரழிவு செய்யத் தலைப்பட்டது. அச்சங்கொண்ட தேவர்கள் சிவபரம்பொருளைச் சிந்தித்து மனமுருகி நின்றனர். பெருமான் மேல்நான்கு கீழ் நான்காக எட்டுக் கால்களும், நான்கு திருக்கரங்களும், பறவையின் அலகும், இறகும், விலங்கின் வாலும், கூறிய நகங்களும், கோரைப் பற்களும், மூன்று கண்களுமுடைய அச்சந்தரத்தக்க சரபப் பறவையின் வடிவம் கொண்டு நரசிங்கத்தோடு பதினெட்டு நாள் போரிட்டு அதன்தோலை உரித்து அணிந்துகொண்டார் என்பது புராண வரலாறு. இவ்வரலாறு சிறு சிறு மாற்றங்களோடும் வழங்கப்படுகிறது.

இப்பெருமானை உள்ளன்போடு வழிபடுகின்றவர்கள் தங்கள் பகையை வெற்றிகொள்வர். மற்றும் பிள்ளைப்பேறு, பிணிநீக்கம் பேய் முதலியவற்றின் தொடக்கு அறுத்தல் இவை யாவும் இப் பெருமான் வழங்கும் குறிப்பிடத்தக்க அருளிப்பாடுகள்.

தமிழ்நாட்டில் பல பெரிய குடும்பங்களின் குலதெய்வமாகத் திகழும் ஸ்ரீ சரபமூர்த்தி இத்திருக்கோயிலில் தனியே கோயில்

கொண்டு அற்புதக் கோலத்தோடு அருள் வழங்குகின்றார். இப்பெருமானை ஞாயிற்றுக்கிழமைகளில், இராகுகால நேரத்தில் வழிபடுவது மிகச்சிறப்பாகக் கருதப்படுகிறது.

உலகில் பகையும் - பிணியும் நீங்கி, வசியும் வளனும் சுரக்கவும் இன்றைய செய்தித் தாள்களிலும், வானொலிகளிலும் நாம் சந்திக்கும், உலக நாடுகளின் போர்க் குமுறல்களும், பிரிவினை முழக்கங்களும் அடங்கி உலகமெலாம் ஒரே குடும்பமெனும் உணர்வு ஓங்கவும் வேண்டித் தருமையாதீனம் 26வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் திருவுளப்பாங்கின்வண்ணம் ஸ்ரீ சரபமூர்த்திக்கு 23—9—73 ஞாயிறு தொடங்கி சகஸ்ரநாமார்ச்சனை ரூபமாக லட்சார்ச்சனை நடைபெற்று வருகிறது. 2—12—73 ஞாயிற்றுக் கிழமையோடு இதுவரை எழுபத்தோராயிரம் அர்ச்சனை நிறைவுற்றிருக்கிறது. பக்தர்கள் யாவரும் நாள்தோறும் நடைபெற்று வரும் இந்த லட்சார்ச்சனையில் பங்குபற்றிப் பகை கடந்து நலம் பெற வேண்டுமென்பதற்காக அனைவருக்கும் வாய்ப்பு அளிக்கப் பட்டுள்ளது. லட்சார்ச்சனையில் கலந்துகொள்ள விரும்புவோர் ஒரு சகஸ்ரநாமார்ச்சனைக்கு ரூபாய் 10 வீதம் கீழ்க்கண்டமுகவரியில் நேரிலோ, பணவிடை மூலமோ செலுத்தி ஸ்ரீ சரப மூர்த்தியை வழிபட்டு இருமைப் பயனும் எய்தக் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள். நேரில் வர இயலாதவர்களுக்கு அஞ்சல்வழி பிரசாதம் அனுப்பிவைக்கப்பெறும். ஸ்ரீ சரப வேள்வி முதலியவற்றுடன் லட்சார்ச்சனை நிறைவுபெறும்.

பணம் அனுப்பவேண்டிய முகவரி,

காஷியர்
ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானம்
திருபுவனம் அஞ்சல்
தஞ்சை மாவட்டம்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின்
அருளாணையின் வண்ணம்
**சுந்தரலிங்கத் தம்பிரான்,**
கட்டளை விசாரணை.

திருபுவனம்
தேவஸ்தானம்.
12—11—73

உ

குருபாதம்

# "ஞானசம்பந்தம்" திங்கள் இதழ்

## சந்தாதாரர்களுக்கு ஓர் அறிவிப்பு.

"ஞானசம்பந்தம்" திங்களிதழ் சைவமும் தமிழும் தழைத்தினிதோங்க, தக்க வகையில் பணி ஆற்றி வருவதைத் தமிழ்மக்கள் நன்கு அறிவர். 10 — 11 — 73 அன்று வெளிவந்த இதழோடு ஞானசம்பந்தத்திற்கு முப்பத்திரண்டு ஆண்டு நிறைவுபெற்று 10—12—73ல் வெளிவரும் இவ்விதழ் முப்பத்துமூன்றுமாண்டின் தொடக்க இதழாக வெளிவருகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறோம்.

காகிதவிலை உயர்வு முதலிய சில இன்றியமையாத காரணங்களால் சந்தாத்தொகை சிறிது உயர்த்தப் பெற்றுள்ளது. ஞானசம்பந்தம் சந்தாதாரர்கள் வழக்கம்போல் சந்தா செலுத்தி ஞானசம்பந்தம் பெற்று நலமடைய வேண்டுகிறோம்.

இன்றுவரை சந்தா அனுப்பாதவர்கள் தனி அறிவிப்பை எதிர்பாராமல் உடன் சந்தா செலுத்த வேண்டுகிறோம்.

| | | | |
|---|---|---|---|
| ஆயுள் சந்தா | .... .... | ரூ. | 100—00 |
| ஆண்டுச் சந்தா | ( உள்நாடு ) | ரூ. | 5—00 |
| ,, | ( வெளிநாடு) | ரூ. | 7—00 |
| தனி இதழ் | .... .... | பைசா. | 0—50 |

கட்டணம் அனுப்பவேண்டிய முகவரி :-

செயலாளர்,
ஞானசம்பந்தம் செயலகம்,
தருமபுரம், மாயூரம் P. O.
தஞ்சை மாவட்டம்.

MAHAMAHOPADHYAYA

உ

குருபாதம்

"ஞானசம்பந்தம்"

தருமையாதீனத் திங்களிதழ்

# ஆயுள் சந்தா அறிவிப்பு

தருமையாதீனத்திலிருந்து திங்கள்தோறும் மலர்ந்து செந்தமிழ் மணமும் சிவமணமும் பரப்பி சிவஞானத்தேன் நிறைந்து கற்போர் கருத்தைக் கவர்ந்துவரும் "ஞானசம்பந்தம்" முப்பத்திரண்டாவது ஆண்டின் நிறைவைப் பெற்று மிக்க எழிலுடன் வெளிவருகிறது.

வேலைமிகுதியினலோ அல்லது மறதியினலோ ஆண்டுச் சந்தா செலுத்துவதில் தடை ஏற்படலாம். தடையில்லாமல் ஞானசம்பந்தம் பெற வாய்ப்பளிக்கும் முறையில் ஆயுள் சந்தா ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. ஆயுள்சந்தா அறிவிப்புச்செய்தது முதல் இன்று வரை 240 அன்பர்களுக்கு மேலாக ஆயுள்சந்தா செலுத்திப் பலர் ஆயுள் உறுப்பினராகி உள்ளனர்.

ஆயுள் சந்தா செலுத்திஞல் அவர்களது வாரிசுகளும் ஞானசம்பந்தம் பெற வசதி செய்து தரப்படும். மேலும் தமது ஆயுள் சந்தாவை மற்றவர்களுக்கோ, கல்வி அறநிறுவனங்களுக்கோ மாற்றிக்கொடுக்க விரும்பினல் அதற்குரிய ஏற்பாடுகளும் செய்துதரப்படும்.

இவ்வரியவாய்ப்பைப் பயன்படுத்தி ஆயுள் சந்தாதாரர்களாகச் சேர்ந்து ஞானசம்பந்தம் பெற்றுப்பயன் அடையுமாறு கேட்டுக்கொள்கிறேம். இன்றே உங்களை ஆயுள் உறுப்பினராக்கிக் கொள்ளுங்கள்.

ஆயுள் சந்தா ரூ. *100—00*

செயலாளர், ஞானசம்பந்தம் செயலகம்,

தருமபுரம். மாயூரம் அஞ்சல், தஞ்சை மாவட்டம்.